KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

7-NOV 1931

Vol 4] 1931 ளு அக்டோபர் மீ 22உ [No. 42.

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 821
2 ஆண்டாள்—(கோதையார் யௌவனமும் அவர் அனுபவமும்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 823
3. சிதம்பரதேவர் சரிதம்.
Dr. V. S. அருணசலம்பிள்ளை 826
4. கம்பராமாயணம் (பள்ளிபடைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 828
5. களவியற் காரிகை
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 830
6. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் 169 - 182)
K. இராமரத்நம் ஐயர் B.A. 833
7. யாப்பிலக்கணம் (வெண்கலிப்பா) 835
8. கந்தபுராணமும் சங்கநூல்களும்.
பண்டிதர் R. திம்மப்பா ஐயர் 837
9. வர்த்தமானம். 839


## கலாநிலயம்

### கடவுளும் காந்தியடிகளும்

நீதியும் நிலைத்த அன்பும் தானே என்னும் தன்மைத் தாய கடவுளொன்று உளதாயின் உலகின்கண் தீமையும் துன்பமும் இருப்பது எவ்வாறமையும் என்னுமோர் ஐயம் பெரும்பாலும் ஆத்திகநிலைவை அசைத்து வைக்குங் காரணமாகின்றது. உண்மையை உரைக்குமிடத்து—தீமைகளையும் துன்பங்களையும் கடவுளின் இருக்கையோடு இணைக்கவல்லதோர் அமைதிகாண்டலரிது. பண்டைப் புராணவரலாறுகளும் புத்திநுட்ப வாதங்களும் இந்த ஆராய்ச்சியிற் செல்லவல்லதோர் தூரம் மிகச் சிறியதே. ஆங்கிலத்தில், மானுடர்பால் கடவுள் விவகரிக்கும் நெறியின் நீதியைக் கணித்து உரைப்பேன் என ஜான் மில்டன் (John Milton) என்னும் மாபெரும் புலவரொருவர் பாடிய 'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்னும் காவியம் அம்முயற்சி பயனற்றுப் போயதென்பதையே நிலைநிறுத்துவதற்குச் சான்றாய் முடியலாயிற்று. இவ்விடயங்களைத் தழுவி யாம் இவ்வாண்டு 19-வது இதழில் வரைந்துள்ள 'இருமன முடையோர்க் கொருசொல்' என்னும் தலையங்கத்தை நினைவுசெய்துகொள்ளல் இனி வருவனவற்றை உணர்வதற்கு உதவியாயிருக்கும். கடவுளைப்போன்றே, அக்கடவுள் புரியும் கருமங்களின் முறைமை தகுதிகளை நம்முடைய யுக்தியுத்திகளால் காண்பதரிது. திருவுளத்தின் வண்ணம் அறிகிலேனே என்ன ஏங்குவதே எம்மனோர்க் கியன்ற தொழில். தீமை துன்பம் என்னும் இவைகளடங்க ஏனையவாவும் கனவிற்கண்ட பொருள்போல் முற்றினும் பொய்யென்று கைவிடிர்க்கக் கூறுவார்சிலர். ஆயினும், அக்கடவுளின் நீதியை அளந்தறியமாட்டாத நாம் மெய்ந்நெறி நன்மையனல்லால் வேறல்லன் கடவுள் என்று நம்புவோமெனின் நம்முடைய சிந்தனை வேறுபாடுற்று விலகவேண்டியதில்லையே. இவ்வித நம்பிக்கை எவருக்கு வருகின்றதோ அவரே பெரியவர். அத்தகைய பெரியாரிற் பெரியாராய் விளங்குகின்ற காந்தியடிகள் கூறிய கட்டுரையொன்றை அவருடைய செவ்விய கூரிய சொற்களிலேயே கேட்போம்:—

"There is an indefinable mysterious Power that pervades everything. I feel it, though I do not see it. It is this unseen Power which makes itself felt and yet defies all proof, because it is so unlike all that I perceive through my senses. It transcends the senses. But it is possible to reason out the existence of God to a limited extent.

Even in ordinary affairs we know that people do not know who rules or why and how he rules; and yet they know that there is a power that certainly rules. In my tour last year in Mysore I met many poor villagers, and I found upon inquiry that they did not know who ruled Mysore; they simply said some God ruled it. If the knowledge of these poor people was so limited about their ruler, I who am infinitely lesser in respect to God than they to their ruler need not be surprised if I do not realise the presence of God, the King of Kings."

Neverthless I do feel, as the poor villagers felt about Mysore, that there is orderliness in the universe; there is an unalterable law governing everything and every being that exists or lives. It is notd blind law; for no blind law can govern the conduct of living bondage; and thanks to the marvellous researches of Sir J. C. Bose, It can now be proved that even matter is life.

188940

That Law, then, which governs all life is God. Law and the Law-giver are one. I may not deny the Law or the Law-giver because I know so little about It or Him. Just as my denial or ignorance of the existence of an earthly power will avail me nothing, even so my denial of God and His law will not liberate me from its operation; whereas humble and mute acceptance of divine authority makes life's journey easier even as the acceptance of earthly rule makes life under it easier.

I do dimly perceive that whilst everything around me is ever-changing, ever dying, there is underlying all that change a Living Power that is changeless, that holds all together, that creates, dissolves, and re-creates. That informing Power or spirit is God; and since nothing else that I see merely through the senses can or will persist, He alone is.

And is this power benevolent? I see it as purely benevolent. For I can see that in the midst of death life persists; in the midst of untruth, truth persists; in the midst of darkness, light persists. Hence I gather that God is Life, Truth, Light. He is Love. He is the Supreme Good.

But He is no God who merely satisfies the intellect, if He ever does. God, to be God, must rule the heart and transform it. He must express Himself in every smallest act of His votary. This can only be done through a definite realisation more real than the five senses can ever produce. Sense perceptions can be and often are, false and deceptive, however real they may appear to us. Where there is realisation outside the senses it is infallible. It is proved not by extraneous evidence but in the transformed conduct and character of those who have felt the real presence of God within.

Such testimony is to be found in the experiences of an unbroken line of prophets and sages in all countries and climes. To reject this evidence is to deny oneself.

This realisation is preceded by an immovable faith. He who would in his own person test the fact of God's presence can do so by a living faith; and since faith itself cannot be proved by extraneous evidence the safest course is to believe in the moral government of the world and therefore in the supremacy of the moral law, the law of Truth and Love. Exercise of faith will be the safest where there is a clear determination summarily to reject all that is contrary to Truth and Love.

I confess that I have no argument to convince through reason. Faith transcends reason. All I can advise is not to attempt the impossible. I cannot account for the existence of evil by any rational method. To want to do so is to be coequal with God. I am therefore humble enough to recognise evil as such; and I call God long suffering and patient precisely because He permits evil in the world. I know that He has no evil in Himself; and yet if there is evil He is the author of it and yet untouched by it.

I know, too, that I shall never know God if I do not wrestle with and against evil, even at the cost of life itself. I am fortified in the belief by my own humble and limited experience. The purer I try to become the nearer to God I feel myself to be. How much more should I be near to Him when my faith is not a mere apology, as it is to-day, but has become as immovable as the Himalayas and as white as the snows on their peaks?"

***இவ்வாங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு வருமாறு:—***

*இன்னதென்று வகுத்துரைக்க மாட்டாத விந்தை வாய்ந்ததாய் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்ற சக்தியொன்று உளது. அதனை யான் காணாவிடினும் உணர்கின்றேன். இந்தக் காணாத சக்தியானது ரூபிக்கப்பட முடியாவிடினும் தான் இருக்கின்றதென்பதைத் தெற்றெனத் தெரிவித்துக் கொள்கின்றது. நான் என்னுடைய பொறிகளால் காண்கின்றவைகளுக்கெல்லாம் அடியோடு மாறாக இருப்பதாற்றான் அச்சக்தியை ரூபிக்க முடிவதில்லை. புலன்களைக் கடந்தது அது. ஆயினும் கடவுள் இருக்கின்றார் என்பதற்கு ஓரளவு காரணம் காட்டுவது கூடும் எனவும் நினைக்கின்றேன்.*

*சாதாரணமாய் ஜனங்கள் தங்கள் அரசன் யாரென்றேனும் அல்லது அவன் என் ஆள்கின்றான் என்றேனும் எப்படி ஆள்கின்றானென்றேனும் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றார்களென்பதை நாம் அறிவோம். ஆனால் நிச்சயமாய் ஆள்கின்ற சக்தியொன்றுளதென்பதைப்பற்றி யாதும் அவர்களுக்குச் சந்தேகமில்லை. சென்ற ஆண்டு நான் மைசூர் இராஜ்யத்தில் யாத்திரை செய்தபொழுது நான் சந்தித்த எளிய கிராமவாசிகள் பலருக்கு மைசூரை ஆள்கின்றவர் எவரென்று தெரியவில்லை என்பது அவர்களோடு வார்த்தையாடுங்கால் எனக்குத் தெரியவந்தது. ஏதோ ஒரு கடவுள் மைசூரை ஆள்கின்றது- என்றே அவர்கள் கூறினர். தங்கள் அரசனைப் பற்றி அவ் வேழைமக்களுக்கு இருந்த அறிவு அவ்வளவு சிறியதெனின் நான், அரசருக்கெல்லாம் அரசராய கடவுளின் இருக்கையைக் கருத்தில் கொள்ளக்கூடாதிருப்பது விந்தையாமோ. அரசனுக்கு அவர்கள் எத்துணை சிறியவர்களோ அதனில் அதிகமும் யான் கடவுளுக்குச் சிறியனல்லனோ.*

*எனினும் மைசூரைப்பற்றி அக் கிராமவாசிகள் உணர்ந்தவாறே நானும் இப்பிரபஞ்சத்தில் ஓர் நியதியும், நிகிலப்பொருள்கள் அனைத்தையும் ஆள்கின்றவோர் விலக்கரிய விதியும் உளவென்று உணர்கின்றேன். அதுவும் குருட்டு விதியன்று. உயிரின் தொடர்புடைய ஒழுக்கத்தினைக் குருட்டுவிதி யொருபோதும் ஆளமுடியாது. ஜடப்பொருள்களுக்கும் உயிருண்டென்று நிரூபித்த ஸர். ஜெ. ஸி. போஸ் அவர்களின் ஆராய்ச்சிக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டவர்களாதல் வேண்டும்.*

*எனினும் எல்லா உயிர்களையும் ஆள்கின்ற விதியே கடவுள். விதியும் அவ்விதியை விதிக்கின்றவனும் ஒன்றே. அவ்விதியைப் பற்றியேனும் விதிப்போனைப் பற்றியேனும் யானறிந்தது மிகச் சிறியதென்ற காரணத்தால் யான் அவ்விதியையாகிலும் விதிப்பவனையாகிலும் மறுத்தலாகாது. இங்கு இவ்வுலகத்தில் ஓர் அதிகாரத்தை யாம் அறியாதிருப்பதும் மறுப்பதும் எப்பயன் எய்துவிக்கும். அப்படியே கடவுளையும் அவர் விதியையும் மறுப்பதால் அவ்வாட்சியினின்று நான் விடுபட்டவனாகமாட்டேன். இவ்வுலகிற்குரிய அதிகாரத்திற்கு ஒவ்வி ஆளாவது வாழ்க்கையைச் சுலபமாக்குவதுபோலவே கடவுளினது அதிகாரத்திற்குத் தாழ்மையுடன் வாய்பேசாது அடங்கி நிற்றல் உயிரின் பயணத்தைச் சுலபமாக்கும்.*

*என்னைச் சுற்றியிருக்கின்ற எல்லாம் எக்காலும் மாய்வனவாகியும் மாறுவனவாகியும் இருக்கின்றன எனினும் அம்மாறுபாடுகளுக்கெல்லாம் அடிப்படையாய் எப்போதும் மாறாததொரு சாச்வத சக்தி, சிருஷ்*



*டிப்பதும் கரைப்பதும் மறுபடி சிருஷ்டிப்பதுமாய் இருப்பதை நாம் ஒருவாறு காண்கின்றோம். அச்சக்திதான் கடவுள். யான் என் புலன்களால் காண்பனவற்றுள் மாயாது மாறாது நிலைநிற்பதொன்றும் இல்லை. அப்புலன்களுக் கெட்டாக் கடவுள் ஒருவரே யிருக்கின்றார்.*

*இப்படி யெல்லாவற்றையும் ஆள்கின்ற அச்சக்திதான் தயையுடையதோ என்னின், களங்கமற்ற தயைமிக உடையதாகவே எனக்குத்தோன்றுகின்றது. ஏனெனில் மரணத்திற்கிடையே உயிரும், பொய்ம்மைக்கிடையே மெய்ம்மையும் இருளுக்கிடையே ஒளியும் உலவாது நிலைநிற்கக் காணவல்லேன். ஆதலின் கடவுள் உயிராயும் மெய்ம்மையாயும் ஒளியாயும் இருக்கின்றாரெனக் கொள்கின்றேன். அவரே அன்பு, அவரே யாதினும் மேதக்க நன்மை.*

*கடவுள் நம் புத்திக்குத் திருப்தியளிப்பதென்பது ஒருபோதுமில்லை. அப்படி, புத்திக்கு மட்டும் பொருந்தி அமைகின்ற கடவுள் கடவுளாகமாட்டார். கடவுள் கடவுளாயிருப்பதற்கு நமது இதயத்தை ஆட்கொண்டு அதனை மாற்றிவைக்க வேண்டும். தன் பக்தனது மிகச்சிறிய செய்கைகளிலும் அவர் தன்னைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். ஐம்புலன்களால் விளையவல்லதைவிட உண்மையாய ஓர் நிச்சயஅநுபவத்தினால்தான் இது இயல்வதாகும். பொறிகளின் அறிவு எவ்வளவு உண்மைபோற்றோன்றினும் பெரும்பாலும் மயக்கமுடைய பொய்யாகி முடிகின்றது. ஆதலின் புலனறிவிற்கு அப்பாலாகிய உணர்ச்சியே உண்மையாகும். புறச்சான்றுகளால் நிரூபிக்கப்படாது, கடவுளின் இருப்பைத் தம்முள்ளே தேறியவர் தம் குணமும் ஒழுக்கமும் மாறிய பான்மையே கடவுளை நிரூபித்ததாகும். தேயந்தோறுங் காலந்தோறும் ஆங்காங்கு இடையறாது தொடர்ந்து திகழ்ந்த தீர்க்கதரிசிகள் முனிவர்கள் முதலியோர் வாழ்க்கை வரலாறுகளே இதற்கு நல்ல சான்றுகளாய் நிலைநிற்கின்றன. இதனை மறுப்பது தன்னையே மறுத்துக்கொள்வதை ஒக்கும்.*

*இந்த ஆன்மாநுபவம் வருதற்குமுன் பிறந்துவளர்வது அசையாத நம்பிக்கை. கடவுளின் இருக்கையை அழியாத நம்பிக்கையால் ஒவ்வொருவனுந் தன்னளவிலேயே சோதித்துக்கொள்ளலாம். இந்நம்பிக்கையைத் தானும் புறச்சான்றுகளால் நிரூபிக்க இயலாது.*

*ஆகையால், உலகத்தின் தரும ஆட்சியிலும், மெய்ம்மையும் அன்புமாய அத் தருமவிதிகளின் மேன்மைச் சிறப்பிலும் நம்பிக்கைவைப்பதே தக்க நெறியாகும். மெய்ம்மைக்கும் அன்பிற்கும்மாறாயவைகளை யெல்லாம் சிறிதுந் தாழாது தள்ளிவிடக்கூடிய இடங்களில் இந்நம்பிக்கையைக் கையாள்வது சாலச் சிறந்தது.*

*அறிவுஆராய்ச்சிகளின் வழியாய்க் கடவுளைச் சாதிக்கவல்ல காரணமொன்றும் யானறியேன். பகுத்தறிவையுங் கடந்துநிற்பது நம்பிக்கை. ஆதலின் இயலாததற்கு முயலவேண்டா. உலகத்தில் தீமைகளிருப்பதற்குத் தக்க காரணம் காட்ட என்னாலியலாது. அது இயல்வதென்றால் கடவுளிற்கோநான்நிகராயபரிசாகும். ஆதலின், தீமை யிருக்கின்றதென்பதை மட்டும் நான் தாழ்மையுடன் தெரிந்துகொள்கின்றேன். அன்றியும் இத் தீமையை உலகில் இருக்கும்படி விடுவதால்தான் கடவுளை நான் பெருந்துயர் தாங்கிய பொறுமையையுடையவரென்றழைக்கின்றேன். அவரிடத்தில் யாதுந் தீமையில்லை; எனினும் தீமையைச் சிருஷ்டித்தவர் அவரே; மற்றுத் தீமையால் அவரோ தீண்டப்பட்டவரல்லர்.*

*உயிரே போவதெனினும், இத்தீமையுடன் இகலிப் பொருது தொலைக்க முயலேனெனின் நான் கடவுளைத் தெரிந்துகொள்ள இயலாதென்பதை யறிவேன். என்னுடைய மிகச்சிறு அநுபவம் இந்நம்பிக்கைக்கு ஆதாரமாகின்றது. நான் தூய்மையாகவாகக் கடவுளைநெருங்கி நெருங்கி யடைகின்ற உணர்ச்சி யுடையவனாகின்றேன். இப்பொழுது ஒப்புக்குஏதோ இருப்பதுபோலல்லாமல் என் நம்பிக்கை இமயமால்வரையன்ன நிலைபேறுடையதாய், அதன் சிகரத்துப் பனியைப்போல் வெண்மையாய் அமையுமெனின் அவருக்கு இன்னும் நான் எத்துணை அணிமியனாவேன்"*

காந்தியடிகளின் இவ்வருமை வாசகங்களோடு, கம்பர்பெருமான், கடவுளிற்கும் தீமைக்கும் உள்ள தொடர்பைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தினை, இந்திரன் இராமனைத் துதிக்கும் வாயிலாய்த் தெரிவித்திருக்கின்ற செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது:—

**"ஒன்றாகி மூலத்து உருவம் பலவாகி உணர்வும் உயிரும் பிறிதாகி ஊழி சென்று ஆசறுங் காலத்து அந்நிலையதாகித் திறத்துலகந் தானாகிச் செஞ்சவே நின்ற நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே நங்கள் நவை தீர்க்கும் நாயகமே, நல்வினையே நோக்கி நின்றாரைக் காத்தி அயற்பேரைக் காய்தி நிலையில்லாத் தீவினையும் நீ தந்ததன்றே"**

# ஆண்டாள்

## 3. கோதையார் யௌவனமும் அவர் அனுபவமும்

[805-வது பக்கத் தொடர்ச்சி]

### 2. கோதையாரும் ஆசாரச் சீர்திருத்தங்களும்

**கோ**தையார் ஈடுபட்ட ஆசார சீர்திருத்தங்கள் அவரால் இயற்றிக் காட்டப்பட்டனவேயாம். ஏட்டுச் சுரையின் கதை அவரிடம் எதிலும் பொருந்தாது. அவ்வாறு பேச்சில் மிகுந்து காரியத்தில் கலவாதாரை அவர் ஏசுவதற்கு அஞ்சுவதுமில்லை. அக்காலத்திலும் நமதுநாட்டில் இக்காலத்திலுள்ளவைபோல் மாலையில் ஏதேதோ அரியபெரிய காரியங்கள் மறுநாள் உதயத்திலேயே செய்யவேண்டுமென்று மொழிவதும், இரவில் துயிலுடன் அப்பேச்சை மறப்பதும் வழக்கமாய்ப் பெரும்பாலும் நடைபெறும். இதை உருவகப்படுத்தி மங்கைமாரைத் தூற்றுவதுபோன்று அமைந்துள்ள திருப்பாவைச் செய்யுளொன்றை நோக்குக:—

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மானாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்பால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொரு
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும் [நாள்
தோற்றம் உனக்கே பெருந்துயில் தந்தானோ

ஆற்ற அநந்த லுடையாய் அருங்கலமே.
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.
திருப்பாவை 10.

வெறும் பேச்சுடன் நின்று காரியத்தில் ஒருபசையுமின்றிப்பெருமைபாராட்டும் ஆசாரச்சீர்திருத்தக்காரர்களையே உருவகப்படுத்தி நேற்றுச் சுவர்க்கம் எட்டிவிட்டதுபோல் பேசும் பெண்ணே யென்று இவர் அழைத்துக்கூறினார்போலும். எப்பொழுதும் சீவராசிகளுக்கு உழைத்துக்கொண்டிருப்பவரும், சோம்பல் நித்திரைகளின் சொரூபமாய் ஒன்றிற்கு முதவாத மூதேவிக்கு நிகராயிருந்த கும்பகர்ணனை உருவற்றுப் போகும்படி அழிப்பவரும் ஆய பெருமானது தொண்டில் ஈடுபட்டதற்கு அடையாளம் காலை யெட்டுமணி வரையில் நித்திரை செய்வதுதானோ வென்று பகர்வார். ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் பேச்சில் அட்டகாசமும்செய்கையில் பெருந்துயிலி லாழ்வதுந்தானே வழக்கம்! யாதும் குறைவிலாதீர் எனவும், இனியாகிலும் வெளியிற் புறப்பட்டுப் பெருமான் தொண்டில் ஈடுபட்டு அவன் சேவகம்பூண்டு உழைக்கத் தெளிவுறவீரென்றுங் கூறுகின்றார்.

ஆண்டாள் செய்த ஆசாரச் சீர்திருத்தங்களில் முதலாவது, வீடுதோறுமுள்ள பெண்டிரை அதிகாலையிலெழுந்து நீராடி வானம் வெளுப்பதன்முன் இல்லம் மீண்டு அங்குற்ற தொழில்களைச் சடுதியில் முடிக்க வேண்டு மென்பதாகும்:—

நாடும் புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.
திருப்பாவை 27.

இத்தகைய சுகமுள்ள இல்வாழ்க்கை, இம்மையில் கோவிந்தனைப் பாடிப்பெறும் சன்மானமென அச்செய்யுளில் முதலில் குறிப்பிடப்பட்டதாம். நமது நிலை, ஆய்ச்சியர் மத்தினால் ஓசைபடக்கடையும் தயிர்போன்றதென்றும், "தேசமுடையாய்! ஏனையோர் பரமன் தொழிலுன்ன, நீ வெற்றெனக்கிடத்தல் தகாது, வெளியேவா'வென்றும், "கள்ளங்கழியக் குடைந்து நீராடு' என்றும் ஆண்டாள் உருவகத்தாற் சுட்டுவார்.

கோதையார் செய்த இரண்டாவது ஆசாரத் திருத்தமாவது, நமது சமயத்தில் கலந்துள்ள சில போலி வைதீக வழக்கங்களை ஒழித்ததாகும். அவற்றுள் சில வேடிக்கைகள் அமைந்த பண்டிகைகள். நமது தென்னாட்டில் தமிழர் முற்றும் ஒழித்ததும் வடநாடு முதலிய விடங்களிலும் ஏனையபாஷை பேசும் தென்னாட்டுறையும் இந்துக்களும் கொண்டாடுவதுமாகிய காமன் பண்டிகை ஒன்று. இது இன்னதென்பது தமிழர் இக்காலத்தில் பெரும்பாலும் அறிந்திலர். இதைக் கன்னடநாட்டில் ஹோலிபண்டிகை யென்பர். இது பங்குனிமாதத்தில் பௌர்ணமியாகிய உத்திரநக்ஷத்திர காலத்தில் கொண்டாடும் விசேடமாம். பங்குனி உத்திரத்தில் சிவபெருமான் காமதகனம் செய்ததால், அது ஒரு விசேட திருவிழாவாய்ச் சிவஸ்தலங்களில் கொண்டாடப்படும். அன்று எங்கும் தீபாவளி கார்த்திகைதீபம் முதலிய நாட்கள்போல் ஊரிலுள்ள வீடுகளிலும் கோயில்களிலும் நூற்றுக்கணக்காய்த் தீபம் எரிவது நமது முன்னோர் காலத்து வழக்கமாகும்.

ஆராய்ந்தடித்தொண்ட ராணிப்பொனாரூரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பதம் பங்குனி யுத்தரம் பாற்படுத்தா
னாரூர் நறுமலர் நாதனடித் தொண்ட நம்பிநந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியு மன்றே.

என்னும் அப்பர் தேவாரச் செய்யுளாலுங் காண்க.

ஆயினும் காமன்பண்டிகை கொண்டாடுவது, மக்களுக்குப் பெரும் பகையாகி ஞானமார்க்கம் செல்லவொட்டாது தடைசெய்கின்ற காமப்பகையைச் சிவபெருமான் சாம்பலாக்கினாரென்னும் கொள்கையைப் பற்றி இன்றுவழங்கவில்லை. தேவர்களுக்காகவும்உலகம் விருத்தியடையும் வகை பெருகவும், சிவபெருமானையே சிற்றின்பத்தில் அழுத்தமுயன்ற மன்மதன் தன்னுடைய ஆவியை யிழந்தாகிலும் பிறருக்கு உலகவழியில் சுகம் ஏற்படவேண்டுமென்று கருதிச்சென்று உயிர்நீத்தானாதலால் அவன் செய்கையைக் கொண்டாடுவதற்கும், இரதிதேவி தனது கற்பால் அவ்வாறு இறந்த கணவனைமீட்டும் பெற்றுளாதலால் விழைந்த கணவனைப் பெண்டிர் பெறுவதற்கும், இப்பண்டிகை ஏற்பட்டதென்பர். இதை ஆண்டாள் 2-ம் திருமொழியில் 1-வது செய்யுளில்

"காமன் போதரு காலமென்று
பங்குனிநாள் கடை பாரித்தோம்"

என்பதையும் நோக்குக. இவ்வாறு மன்மதனுக்கென்று கொண்டாடும் ஒரு திருவிழாவைக் கோதையார் குணமற்றதென எடுத்துக்கூறாது, அதை எவ்வளவு ஏளனம் செய்யக்கூடுமோ அவ்வளவு முதல் திருமொழியில் அவர் செய்வது காணலாம். பக்திவலையன்றி, காமவலையிற் கட்டுப்படாத பரம்பொருளை "ஓ காமதேவா நோக்கச் செய்வாயோ''வென்பது வற்புறுத்தும் நடை இப்பதிகத்திய தென்பதைத் திருக்கடைக்காப்பாகும் 10-ம் செய்யுளிற் காணலாம்.

கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக்
கழலிணை பணிந்தங்கோர் கரியலற
மருப்பினை யொசித்துப்புள் வாய்பிளந்த
மணிவண் ணற்கென்னை வகுத்தி டென்று
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர் கோன்விட்டு சித்தன் கோதை
விருப்புடை யின்தமிழ் மாலை வல்லார்
விண்ணவர் கோனடி நண்ணுவரே.
1-ம் திருமொழி 10.

"கரியலற மருப்பினை யொசித்துப் புள்வாய்பிளந்த" என்னும் அடைமொழி, பற்றற்று அழைக்கும் சீவனுக்கே ஓடிவரும் மணிவண்ணன், காமவேளால் வலிக்கப்படுவனோ என்பது விளக்கம். "ஓ காமதேவா, நான் உன்னைச் செவ்வனே நோற்கமுடியும், ஆயினும் அருளுடன் (திருந்தவே) நோக்கும்படி கமலவண்ணனைச் செய்விக்கஉனக்குத் திறலுண்டோ" என்றவாறு.

உருவுடை யாரிளை யார்கள் நல்லார்
ஒத்துவல் லார்களைக் கொண்டு வைகல்
தெருவிடை யெதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா
கருவுடை முகில்வண்ணன் காயா வண்ணன்
கருவிளைபோல் வண்ணன் கமலவண்ணத்



திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
* திருந்தவே நோக்கெனக் கருள்கண்டாய்.

இவ்வாறுகூறியது காமநோய் செப்புவதன்று. மூவுலகும் தன்னுருவாய்க் காட்டிய திரிவிக்கிரம சொரூபத்தில் இலயமாய் நில்லாது உலகத்தில் உலாவைக்கும் நடலைநோயைச் செப்புவதேயாம்

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்தண் முகில்காள் மாவலியை
[காள்
நிலங்கொண்டான்வேங்கடத்துநிரந்தேறிப்பொழிவீர்
உலங்குண்டவிளங்கனிபோல் உள்மெலியப்புகுந்தென்
நலங்கொண்டநாரணற்கென் நடலைநோய்செப்புமினே
மேகவிடுதூது 6.

ஆகையால் மன்மதனை வஞ்சகப்புகழ்ச்சியில் ஆண்டாள் பாடுங்கால் பிரயோகிக்கும் சொற்றொடர்களின் கூர்மையை முதல்திருமொழியின் 3-ம் செய்யுளில் "தத்துவமிலி"யென்று குறிப்பிடுவதா லறிக:—

மத்தநன் னறுமலர் முருக்க மலர்கொண்டு
முப்போ தும்முன் னடிவ ணங்கித்
தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து
வாசகத் தழித்துன்னை வைதிடாமே
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கோவிந்த னென்பதோர் பேரெழுதி
வித்தக வேங்கட வாணனென்னும்
விளக்கினிற் புகவென்னை விதிக்கிற்றியே.
நாய்ச்சியார் திருமொழி.

இதற்கு முன்செய்யுளிலும் "முள்ளுமிலாச் சுள்ளியெரிமடுத்து முயன்றுன்னை நோற்கின்றேன்" என்றும் "வாயுடை மறையவர் மந்திரத்தால் மன்மதனே யுன்னை வணங்குகின்றேன்" என்றும் பரிகாசமாய் மன்மதனுக்கு இவ்வம்மையார் வணக்கஞ்செய்வது காண்க.

இவ்வாறு சிறுதெய்வ வணக்கங்கள் கூடாதென வெளிப்படையாய்த் தடைசெய்யாது ஆண்டாள் காமன் பண்டிகையை முதல் திருமொழியாகிய திருப்பதிகத்தில் வஞ்சகப் புகழ்ச்சியில் வர்ணிக்கின்றனர். கோவிந்தனுக்கன்றி யாருக்கும் ஆளல்லளென்பதை மொழிவது அப்பர் கூறியவாறு "சென்று நாஞ்சிறு தெய்வஞ் சேர்வோ மல்லோம்'' என்பதை விளக்குவது போல் காண்கின்றது. இதைத் திருப்பாவையில்

இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்
திருப்பாவை 29.

என்றதும் நோக்குக.

கோதையார்செய்த மூன்றாவது ஆசாரச் சீர்திருத்தமாக, ஆரிய சம்பந்தத்தால் நேர்ந்த கன்னிகைப் பெதும்பை மணத்திற்குக்கட்டுப்படாது, ஔவையார் முதலிய தமிழ்ப் பண்டிதர்போல் தனித்து நிற்கத் "துணிந்த துணிவை'' 12-வது திருமொழியில் கூறிய ஊசியாற் குத்துவதுபோல் குத்திக்காட்டுவாராயினர். பாவிகாள்! எங்களுக்கு ஏச்சுகொல்லோ? கற்றனபேசி வசையுணாதும் நாட்டில் தலைப்பழியெய்தி யுங்கள்நன்மையை யிழந்து தலையிடாதும் இருப்பீராக. "மற்றிருந்தீர்கட்கு அறியலாகா மாதவனென்பதோ ரன்பு தன்னை, உற்றிருந்தேனுக்கு (நீவீர்) உரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர்வார்த்தையாய்'' முடியும் என்பர். நீங்கள், தேகத்தின் உருவத்தைக் கண்டு யான் மங்கைப் பருவமடைந்ததால் நாணுவேனென்று எண்ணவேண்டாம்'' என்பர்.

அங்கைத் தலத்திடை யாழி கொண்டான்
அவன்முகத் தன்றி விழியே னென்று
செங்கச்சுக் கொண்டுகண் ணாடை யார்த்துச்
சிறுமா னிடவரைக் காணில் நாணும்
கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர்
கோவிந்த னுக்கல்லால் வாயில் போகா
இங்குத்தை வாழ்வை யொழிய வேபோய்
யமுனைக் கரைக்கென்னை யுய்த்திடுமின்
12-வது திருமொழி 4.

எனப் பெண்பிள்ளைகள் பருவத்தால் படும் சங்கடங்களைப் பெண்ணென்னும் முறையில் வருந்திக் காட்டுகின்றனர்.

ஆண்டாள் செய்த 4-ம் ஆசாரச் சீர்திருத்தமாக, ஜாதிபேதம் நோக்கலாகாதென்பது. இதைக் கூறுவது போல் "கண்ணபிரான் இழிந்த சாதியிற் பிறந்தவன், அவனுக்கும் நமக்கும் சம்பந்தம் தகாதோ ஓ விப்பிர பாவிகாள்'' என்ன

கற்றின மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்
காடுவாழ் சாதியும் ஆகப் பெற்றான்
பற்றியு ரலிடை யாப்பு முண்டான்
பாவிகாள் உங்களுக் கேச்சு கொல்லோ
கற்றன பேசி வசையு ணாதே
காலிக ளுய்ய மழைத டுத்துக்
கொற்றக் குடையாக வேந்தி நின்ற
கோவர்த் தனத்தென்னை யுய்த்திடுமின் !
12-வது திருமொழி 8.

குலத்தைப்பார்ப்பீரோ, அவன்குணத்தைப்பார்ப்பீரோ? கோவர்த்தனகிரியைக் குடையாயேந்திய அவன் குணத்தை எண்ணுவீராகிலும், பின்னர்க் குலபேதங்கள் என்னாகுமென்பதையும் இவ்வம்மையார் இச்செய்யுளிற் குறிப்பிடுவது காண்க. இடர்க்கடலிற்படும் மன்பதைகளில் உயர்ந்தோர் யாவர், தாழ்ந்தோர் யாவரென்பதுபோலும். "ஒரு குளத்து நண்டு'' என்று வழங்கும் பழமொழிக் கேற்பவும், மனிதர் ஒருவரையொருவர் குலபேதத்தால் உயர்ந்தோர் தாழ்ந்தோரென் றெண்ணும் செய்கை தகாதென்பது போலும். கோதையார், பாஞ்சசன்னியத்தை நோக்கி மொழிவது காண்க:—

உன்னோ டுடனே ஒருகடலில் வாழ்வாரை
இன்னா ரினையாரென் றெண்ணுவா ரில்லைகாண்
மன்னாகி நின்ற மதுசூதன் வாயமுதம்
பன்னாளு முண்கின்றாய் பாஞ்ச சன்னியமே.
7-வது திருமொழி 5.

பிராமணோத்தமரால் வளர்க்கப்பட்டுப் பார்ப்பனக் கூட்டத்தினிடையே வதிந்த ஆண்டாள், இக்காலத்தில் நாம் பிரயத்தனம் செய்யும் ஆசாரச் சீர்திருத்தங்களைத் துவக்கினாரென்பது மிகவும் வியக்கத்தக்கதே. இவர் எவ்வெவ்வாசாரச் சீர்திருத்தங்களை எங்கெங்கு நிலைநிறுத்திக் காட்டினாரென்பதை ஆராயத்தக்ககருவி

* கடவுள் எல்லாச் சீவர்களையும் நோக்கா தென்றுமிருந்திலராயினும், அருளுடன் நோக்கும் திருப்பார்வை வேண்டுமென்பர் கோதையார்.

கள் போதுமானவை நமக்கு இக்காலத்தில் கிடைக்கவில்லை யாகையால், இவ்வாழ்வாரிடம் அன்புபூண்ட வைணவக் கல்விமான்கள் புராதன வைணவ சாசனங்களால் ஆய்ந்து வெளியிடின் உலகத்திற்குச் சிறந்த உதவியாகும். இவ்வம்மையார், குணமெனப்படுவது யாதெனக் காட்டுவதில் ஈடுபட்டு இரவும்பகலும் பல காலம் உழைத்தன ரென்பதே, பின்வரும் செய்யுளில் சற்று மறைந்து காணப்படும். ஆண்டாள் மேன்மை அவர் சொற்களை நாம் ஊடுருவிச் சென்றால் செவ்வனே விளங்கும்:—

ஒளிவண்ணம்வளைசிந்தை உறக்கத்தோடிவையெல்லா
எளிமையாலிட்டென்னை யீடழியப்போயினவால் [ம்
குளிரருவி வேங்கடத்து என்கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ஆவிகாத் திருப்பேனே.

8-வது திருமொழி 3.

எனவே, கோதையார் இக்காலத்தில் நாமிபற்றும் ஆசார சீர்த்திருத்தங்களைப்போல் போலிச்செய்கையாயிராமல் மனமொத்த செய்கையாயிருக்கும் வண்ணம் ஒரு ஆசாரிய மூர்த்தமாய்க் காணப்படுகின்றார் என்னலாம்.

# சிதம்பரதேவர் சரிதம்.

[806-வது பக்கத் தொடர்ச்சி]

## 17. குலசேகரப்பெருமாள் சிறைப்படுதல்.

குலசேகரன் தன் குமாரன் பிரிந்த நாள்முதல் புத்திர சோகத்தால் தேகம் மெலிந்து திடமும் பலமுங் குன்றி இராஜவிசாரணையுங் குறைந்துவிட,மந்திரிகளும்பத்தினிகளுந் தேற்றுங்கால் ஒருவாறு தேறியும் புத்திரனை நினைத்தமாத்திரத்திற் சோகிப்பதுமாய்க் காலங் கழித்து வந்தான். பிரஜைகளும் அரசனுங்கு நேர்ந்ததே தங்கட்குமென்று துக்கித்தவர்களாய் நாட்கழித்தனர். விக்ரமசேனன் அரசனுக்குத் தேறுதல் கூறிக்கொண்டு இராஜகாரியங்களை அரசன் வழுவவிடினும் தான்தளராது ஊக்கமுடன் நடத்திவந்தான். தனது புதல்வன் அரசகுமாரன்பின் சென்று அவனுக்குப் பணிவிடைசெய்து வாழ்வதைவிட மேலானகாரியம் மற்றொன்று மில்லையெனத்துணிந்த உள்ளத்தோடுஞ் சென்றதை நினைத்துநினைத்து ஆனந்த முற்றான். இத்தருணத்தில் இரவிவர்மன் சேனைத்திரள் இரகசியமாய்ப் பட்டணத்தை முற்றுகை போட்டிருப்பதைப் படைஞர்தம் ஆரவாரங்களைக் கேட்கும்வரையில் தெரிந்துகொள்ளாமற் போனார்கள். ஆகையால் யாவருந் திடுக்கிட்டு ஆச்சரியப்பட்டுச் சோமபாலனும் கோமளாங்கனும் இரவிவர்மனைத் துணைகொண்டு யுத்தம் புரிய யத்தனித்திருப்பதைக் குடிகளறிந்து இனிச் செய்வது யாதென்று வருந்தினார்கள். சங்குபேரிகைகளின்முழக்கமும் ஆரவாரமுங் கேட்டெழுந்த அரசன் தூதுவரை யழைப்பித்து நடக்கும் விசேடத்தை யறிந்துவரும்படி கட்டளையிட்டு, விக்ரமசேனனையும் மற்ற மந்திரி பிரதானிகளையும் வரவழைத்து, "ஏதோ சத்திரு பட்டணத்தை முற்றுகை போட்டிருப்பதாகத் தோற்றுகின்றது. நாமிங்குச் சக்ரவர்த்தியாயிருந்துங் கொஞ்சமு மச்சமின்றி இவ்வளவு தீரத்துடன் வந்தவன் யார்? க்ஷணப்பொழுதேனும் வீண்காலம் போக்காமற் சத்துருவை ஜயிக்க முயலுங்கள்" என்றான். இதற்குள் தூதுவர்கள் திரும்பிவந்து, "அரசே,சோமபாலன் அழகாபுரி இரவிவர்மனையடுத்துத் தங்கள் சோகத்தையும் மர்மங்களையும் உரைத்துச் சைன்யமொன்று சேர்த்துக் கோமளாங்கனுடன் அவ்வரசனைத் துணைகொண்டு போர்புரிய வந்திருக்கிறார்கள். சேனைகள் பட்டணத்தைச் சுற்றிக் குடிகளைக் கொள்ளையிட்டுப் பலவிதமாய் வருத்துகின்றார்கள். தங்களை இகழ்ந்து பேசுகிறார்கள். இன்னும் சிறிதுகாலத்திற்குள் பட்டணைத்துட் பிரவேசிப்பார்கள்போற் காண்கிறார்கள்' என்றனர்.

அரசன் விக்ரமசேனனைப்பார்க்க அவன் பணிந்து, "ஐயனே! யானுந் தங்களைப்போலவே வியப்புற்றேன். இரவிவர்மன் எவ்வளவு! நம்மேல் தளமெடுத்து வருவதென்றால் யானை சிங்கத்தை எதிர்ப்பதுபோலாயிற்றே! இது கடவுள் ஆக்ஞையென்றே தெளியவேண்டும். யுத்தம் புரிவதே யுக்தம்" என, அரசன் சேனாபதியைப் பார்த்தான். அவன்வணங்கி "உத்திரவானால் சேனையை நடத்துகிறேன்," என்றான். இதற்குள் குடிகள் "கூ"வென்று கூச்சலிட்டுக்கொண்டு அரசசபை நாடி 'ஓ மஹானுபாவர்களா! துஷ்டரான சோமபால கோமளாங்கர்கள் அழகாபுரத் தரசனுடன் பட்டணத்தைச்சுற்றிச் சைன்யங்களை விடுத்து எங்களைப் பலவிதமாய்க் கஷ்டப்படுத்துகிறார்கள். தெய்வம் உங்களைக் கைவிட்டதுபோலிருக்கின்றது. சோமபாலனை அரசனாக்கி நாங்கள் வாழோம். நீங்கள் சிங்கத்தையொத்த புஜபல முடையவர்களாகையால் யுத்தத்திற்குவெளிப்படுங்கள். நாங்களும் துணையாய் வருகிறோம் நீங்கள் பிராணனை விட்டால் நாங்களும் போர்புரிந்துடன்மாய்வோம். அன்றேல் இச்சிற்றரசனைப் பறக்கடிப்போம்" என்று முறையிட்டனர். 'என் பிராண சிநேகர்களே! இதோ நான் சைன்யத்துடன் போர்புரிய வெளிப்படுகின்றேன். பிறகு கடவுளிஷ்டம்போல் முடியட்டும்" என்றவர்களை யனுப்பி யுத்தத்திற்குச் செல்ல உத்திரவளித்துக்கொண்டிருக்க,இரவிவர்மனுடைய தூதர்கள் தோன்றி அரசன் தீரத்தைக் கண்டு வியந்து, "ஓ இராஜசேகரா, நாங்கள் இப்பட்டணத்தை முற்றுகையிட்டிருக்கும் அரசன் தூதுவர்கள். அவ்வரசன் தந்த திருமுகத்தைக் கொணர்ந்தோம். தங்கள் உத்திரவு என்ன?" என்று கூறித் திருமுகத்தை நீட்டினார்.

விக்ரமசேனன் அதை வாங்கி, "மகாராஜராஜ துங்க புங்க குலசிரேஷ்ட வீரசேகர சிரோன்மணி அழகாபுரியை நீதி வழுவாது அரசாட்சி செய்துவரும் இரவிவர்மபூபதி திருவாய்மலர்ந்தருளியபடி பாலைவனமாளும் குலசேகர வேந்தற்கு எழுதிய நிருபம். தாம் நீதிதவறி நடப்பதுந்தவிரத் தமதுபிதாவின் சகோதரரின் குமாரரும் நமது உத்தம நண்பருமான பராக்ரமசேகரப் பெருமாளைத் தமது பிதாவின் கோரிக்கையால் நியமிக்கப்பட்ட சேனாதிபதி ஸ்தானத்தினின்



றும் நீக்கி அவர் குமாரனும் போர்ச் சேவகருமான தீரபராக்ரமசூர கோமளாங்க சேகரப் பெருமாளை யாதொரு காரணமுமின்றிக் காராக்ரகத்தி லடைத்து அவர் முதற் புதல்வனாகிய சோமபாலசேகரப் பெருமாளைப்பட்டணத்தைவிட்டு வெளியே துரத்திவிட்டீர். பராக்ரமசேகரப்பெருமாள் எமது உத்தம நண்பரானபடியால் அவருடைய உத்தமகுமாரர்கள் எம்மிடம் அபயங்கோரினபடி அவர்களுக்கு இந்தப் பாலைவனத்தை ஆளும்படி அபயஸ்தம் கொடுத்தோம். தாம் இனி அரைக்ஷணமேனும் இவ்விராஜதானியிலிராது ஓடிப்போய் உயிர்தப்பிப்பிழைப்பீர். அன்றேல் யுத்தமுகத்தி லிறக்கக்கடவீர். இவ்விரண்டிலொன்றை இத்தூதுவரிடம் தெரிவிப்பீர். மறுக்கின் இனி ஒரு கடிகையில் நீரிருக்கு மிடந்தேடிப் பிடித்துக் கொலை செய்து இவ்விராஜ்பத்தை ஆள்வோம். தவிர, தமது கொடுமை சகியாது தமது சேனைகள் யாவும் நமதிடம் அபயம் கோரிச் சேர்ந்திருப்பதும் அறிவீர். இங்ஙனம் மகாராஜ ராஜசேகர இரவிவர்மபூபாலன் பாத சேவித சேனாதிபதி குடாரவிந்தன்" என்றிப்படி வாசித்தான்.

அரசன் இதனைக்கேட்டுக் கண்களில்நெருப்புப்பொறி பறக்கக் கடுஞ்சினத்துடன் கலகலவென்று சிரித்துக் "குலசேகரன் யுத்தத்திற்குப் பயந்து உயிர் பிழைப்பவனல்லனென்றும் தன் சேனை சத்துருவைச் சேர்ந்தாலும் உயிரிருக்கமட்டும் போராடுபவனென்றும் இரவிவர்மனுக்கு உரையுங்கள்" என்று தூதவரை யனுப்பிச் சேனாதிபதியை அழைத்து, "நீயும் சத்துருவுக்கிணங்கிச் சேனையை யனுப்பி இனி என்செயக் காத்திருக்கிறாய்" என்று கடிந்து வினவ, அவன் அவர்பாதத்தில் விழுந்து, "அரசே, நானொருநாளும் புறங்கூறிப் பிழைப்பவனல்லன். சைன்னியம் சத்துருவை அடைந்திருக்கின் யானறியாமலே சென்றிருக்கவேண்டும்.என் பேரி லொன்றுஞ் சந்தேகம் வேண்டாம். என்பிராணனிருக்குமட்டும் தங்களுக்கொரு குற்றமும் செய்யேன்.சத்தியம்" என்றான். அவன் முகக்குறியால் வஞ்சகனல்லனென்றுணர்ந்து விக்ரமசேனனைப் பார்க்க அவனும் "ஐயனே! வெகுகாலமாய்ச் சோமபாலன் செய்துவந்த இராஜத்துரோகத்திற் கிணங்கிச் சில சைன்யத் தலைவர்கள் சச்சரவு செய்ய அவர்களை அகற்றினேன். அவர்களுஞ் சேர்ந்து சைன்யத்தைத் திருப்பியிருக்கினு மிருக்கலாம்.நம்சேனாதிபதியின்மேற்குற்றமில்லை. எல்லாம் சிவன் செயல்" எனக் கூறினான்; "எமக்குத் துரோகம் செய்யாச் சேனை யேதேனுமிருக்கின் நடத்திவா" என்று சேனாதிபனுக்குக் கட்டளையிட்டு யுத்தத்திற்கு ஆயத்தமானான் குலசேகரன்.

மந்திரிகளும் மற்றப் பிரதானிகளும் அரசன் தீரத்தைப் புகழ்ந்து ஆயுதந்தரித்து வெளிப்பட்டார்கள். அரசனும் ஆயுதந்தரித்து யுத்தசன்னத்தனாகித் தன் பத்தினிகளிடம் விடைபெற்றபின் அரண்மனையை விட்டு மந்திரிகளுஞ் சேனாதிபதியும் மிகுந்தசேனையுந் தன்னைச் சூழ்ந்துவரச் சிம்மத்தைப்போற் கர்ச்சித்துச் சத்துரு சைன்னியத்தை எதிர்த்தான். குடிகள் யாவரும்யுத்தகோஷம்செய்து ஆரவாரித்துச்சத்துருசேனைகளுடன் அரசனுக்குதவியாய்ப் போர் புரிந்தனர்.

அக்காலத்திற் பீரங்கிமுதலியவை இல்லை. சிறு துப்பாக்கிகள்கூட வழக்கத்தி லில்லாதிருந்தன. அரசர்களும் சேனாதிபதிகளுமே அவைகளைக் கையாண்டு வந்தனர். வாள் பரிசை கதை குந்தம் ஈட்டி வில் அஸ்தரம் முதலியவைகளே பெரும்பாலும் யுத்தங்களில் உபயோகப்படுத்தப்பெற்றன. இருதிறச் சைன்யங்களும்நெருங்கி ஆரவாரித்துப் போர்புரியவும் அழகாபுர சைன்யத்தில் பாதியும் பாலைவன சைன்யத்தில் முக்கால்பாகமும் அழிந்தன. இரவிவர்மன் குலசேகரப் பெருமாள் தீரத்தையும் கால்மாடு தலைமாடாய்ச்சேனையைவெட்டிச்சாய்ப்பதையும் அவருக்குஇடமும்வலமும் விக்ரமசேனனும் சேனாதிபதியும் அவரை யகலாமல் கடினமாய்ச் செய்யும் யுத்தத்தையுங்கண்டு திகிலடைந்து இவர்களை வெல்ல இயலாதென்று ஏங்கி நிற்க, அவனைத்தேற்றிச் சேனையை எச்சரித்துக் குலசேகரப் பெருமாள் சேனையை எதிர்க்க விடுத்துச் சோமபாலனுங் கோமளாங்கனும் இரவிவர்மனுடனும் மற்றவீரர்களுடனும் அரசனை எதிர்த்துச் சேனாதிபதியைத் துப்பாக்கியாற் சுடவே அவன் குலசேகரன் பாதத்தில் நமஸ்கரித்து வீழ்ந்தான். பாலைவனவீரர் பெருவெள்ளமான அழகாபுரசேனைக்கு எதிர்நிற்க மாட்டாமல் ஓடத்தலைப்பட்டனர். அரசனும் மந்திரியும் சைன்யங்களுடன் போராடிப் பிறகு அரசர்களுடன் போராடநேர்ந்தமையால் அரசன் களைத்துப் பூமியில் வீழ்ந்தான்.உடனே விக்ரமசேனன் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் அரசனைப் பாதுகாத்துத் தன் உயிரையுங் காப்பாற்றிக்கொண்டு யுத்தம் புரிந்துவந்தான். இப்படித் தன்னாலானமட்டும் போராடி இனி முடியாதென்று தோன்றவே, கோமளாங்கனைக் கொல்லவெண்ணி அவனுக்கு நேராய்த் தனது வாளை ஓங்கிப் பாய்ந்து வீசினான். இதற்குள் கோமளாங்கன் கத்தி வீச்சுக்குச் சற்றே விலகவே, அவனருகில் நின்றிருந்த குடாரவிந்தன், வெட்டுண்டிறந்தான். சமயம் பார்த்து நின்றிருந்த கோமளாங்கனும் சோமபாலனும் துணைவரோடு ஓடிச்சென்று குலசேகரப் பெருமாளையும் விக்ரமசேனனையும் பிடித்து அவர்களாயுதங்களை அகற்றிச் சிறைசெய்தனர். இது தெரிந்து மற்றச் சைன்யங்களுங் குடிகளுந் தங்களாலானமட்டும் சண்டைசெய்து அரசனையும் விக்ரமசேனனையும் மீட்க முடியாமற் போகவே புறங்காட்டி யோடினர். அழகாபுரத்தரசன் ஜயபேரிகையை யடித்துப் பட்டணத்துட் பிரவேசித்து அரண்மனைக் கெதிராய் வருவதைக் கண்ட இராஜபத்தினிகளுந் தோழிகளும் விக்ரமசேனன் செய்திருந்த தந்திரத்தால் அரண்மனையை விட்டுப் பிலத்துவார வழியாய் வெளிப்பட்டு விக்ரமசேனன் கிரகத்திற்குச் சென்று அவன் மனைவியுடனும் தங்களுக்காக எதிர்பார்த்திருந்த விஜயசேகரனுடனும்இரகஸியமாய் மாளவதேசம் நோக்கிச்சென்றனர்.

இரவிவர்மன் சோமபால கோமளாங்கருடன் அரண்மனை செல்ல அங்கெவருமில்லாதிருக்கக் கண்டு ஆச்சரியமுற்று இராஜபத்னிகள் மறைந்துபோன மார்க்கம் அறியாதாராய் அம்முயற்சியைவிட்டுப் பொக்கிஷத்தையும் இராஜாங்கத்தையும் அபகரித்துக் குடிகளை யடக்கி இரவிவர்மனுக்கே பட்டங்கட்டுவித்துச் சோமபாலன் முதன்மந்திரியாகவும், கோமளாங்கன் சேனாதிபதியாகவும் நியமிக்கப்பெற்று இராஜ்யபரிபாலனஞ் செய்யத் துவக்கினர். பராக்ரமசேகரன் மரணகாலத்தில் சோமபாலனைக் கேட்டுக்கொண்டபடி குலசேகரப்பெருமாளையும் விக்ரமசேனனையுங்

காராக்கிருகத்தி லடைத்துவிட்டனர். இக்காரக்கிரகங்களின் அறைகளி லடைக்கப்பட்டவர்கள் வெளிப்பட்ட பிறகு மிகவும் பந்தோபஸ்தாய்ப் பிலத்துவாரங்களை யடைத்துத் தக்கபடி கட்டப்பட்டிருந்தன. பிரஜைகள் இனிச் செய்வது யாது என்று அழகாபுரத் தரசனுக்குக் கீழ்ப்படிந்து மனமில்லா மனதாய் நடந்து வந்தார்கள். மஹாதேவர் யுத்தத்திற் தப்பித்துக்கொண்டு மாறுவேஷம் பூண்டு மாளவதேசஞ் சென்று அரசனையும் விக்ரமசேனனையும் சிறையில் வைக்கப்பட்டிருப்பதை மாளவ இராஜனுக்கும் இராஜ பத்னிகட்குந் தெரிவித்து அவரைச் சிறைமீட்க வேண்டிய முயற்சி செய்துவந்தார்.

---

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்—9. பள்ளி படைப் படலம்.

[812-வது பக்கத் தொடர்ச்சி]

பரதன் தருமமும் வியக்கற் பாலதோ.

'**பா**ருனக்காக்கினேன்' என்றிங்கு நின்ற கைகேசி அங்கு வடநூலில், "ஆதலால், அரச நீதியையறிந்த பரதனே, நீ யதனை இனி ஆள்க" என முடித்தனள். இயலுமேல் அண்ணனையகற்றி மண்ணினைக் கைக்கொண் டாள்வது அரசநீதிக் கயலானதன்றென்னுமோர் கொள்கை ஆரியர்தர்மத்தில் அமைந்திருந்தது. எல்லோர்க்கும் எந்நிலையிலும் எக்காலத்திலும் எத்தொழிலிலும் ஏற்புடையவோர் அறத்தினை முதலறமென்றும், மற்று நிலைக்குந் தொழிற்குந் தக்கவாறு வேறுபட்டு நிகழ்கின்ற அறத்தினைச் சார்பறமென்றும் வகுத்துக்காட்டி, ஆரியநாகரிகம் முதலறத்தை மறத்திலதேனுஞ் சார்பறத்திற் குடன்பட்டு நடந்ததென்றும், திருவள்ளுவநாயனாரும் அதற்கொருவாறு ஒவ்வியிருந்தனரென்றும், கம்பரோ சார்பறச் சூழ்ச்சிகளிற் சோராது முதலறத்திலேயே முனைந்த உணர்வினரென்றும் முன்னர் (3-வது வால்யூம், இதழ்கள் 1 முதல் 25 வரையில்) விரிவுற விளக்கியிருத்தலால் மீண்டுமிங் கவைகளை வரைதல் மிகை. எனின், இங்கு உணர்தற்குரியது ஒன்றே. சூதினால் பாண்டவர்தம் பாகத்தை வௌவிய சுயோதனனும் இச் சார்பறத்தைச்சார்ந்த இராஜதர்மத்தின் எல்லைக்குள் காக்கப்பட்டவனே என்னுங்கொள்கை ஆரியத்திலுளது. அக்கொள்கையைத் தழுவியே வான்மீகர் நூலில் கைகேசி, "அரசநீதி அறிந்தவனே, நீயிதனில் யாதும் பிழைகாணமல், எய்திய இவ்வரசினை இனிது ஆள்க" என்று குறிக்கலாகின்றனள். அன்னதற்கிணங் காதகம்பர்பிரான், கைகேயியுங்கூடத் தன் சூழ்ச்சிக்கு அரசநீதியைத் துணையழைக்க மனங்கொண்டிலர்.

அறந்தான் எதுவேயாயினும், அன்பினால் உயர்ந்த பரதன் தன் அன்னையையும் அவள் செய்கையையும் அடியுடன் மறுத்துவிட்டனன். கொடியன கூறித் தன்முன் தாயெனநிற்குமத் தீயோளைப்பற்றிக் குமைத்துயிர்கொல்லப் புகுகின்ற கரங்களை அசனியஞ்ச ஒன்றொடொன் றடித்து,

மாண்டன னெந்தையென் றம்முன் மாதவம்
பூண்டன னின்கொடும் புணர்ப்பி னாலென்றால்
கீண்டிலென் வாயது கேட்டு நின்றயான்
ஆண்டனே னயன்றோ வரசை யாசையால்

என்று தன்னிழிவைப் பகர்வான்போல் அவள்பழியை அறைய லுற்றான். தந்தையையும் மாய்வித்துத் தமையனையுந் திருநாடு தோற்பித்துப் பாரினைத் தன் புணர்ப்பினால் ஆளுமாறு ஆக்கிய பாவி யிவள்வாயைக் கீண்டாது கேட்டு நின்றதால், ஆசைபற்றி ஒருகால் அவ்வரசினை ஆளத்தான் இசைந்தானோ பரதன் என்றெவரும் எண்ணு வண்ணம்,

நீயினை மிருந்தனை யானு நின்றனென்
ஏயெனு மாத்திரத் தெற்று கிற்றிலென்
நாயகன் முனியுமென் றஞ்சி னேனலால்
தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ

எனத் தொடர்கின்றனன். பெயரளவில் மாத்திரமேயன்றித் தந்துள பலவற்றால் உண்மையே தாயிவள் தனக்கு ஆவாள் எனப் பரதன் தன்னைத் திருத்திக் கொள்வான்போல் வெஞ்சினத்தால் விளையும் வஞ்சகப் புகழ்ச்சியால்,

நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
பேயீ ரேநீ ரின்ன மிருக்கப் பெறுவீரே
மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீ ரேநீ ரின்னு மெனக்கென் றருவீரே.

[உன் கணவனது உயிரைத் தின்றாய் ஆயினும், நீ ஒரு நோய் போல்வாய்அல்லை. அவன்உயிரை உண்டபின்னும் நீ மாயாது இருப்பதால் பேயே ஆவாய். எனக்கு முன் முலை தந்தாய், இப்பொழுது மாயாத கொடிய பழியைத் தந்தாய், ஆகையால் எனக்கு நீ தாயே ஆவாய்—ஆகி எனக்கின்னும் என்ன தருவதற் கிருக்கின்றாயோ!]

எனச் சின நகை யெரிந்து கைபிசைந்தனன். நோயும் பேயும் பற்றியவ ருயிரை உண்டுவிடுமெனினும் அவ் விரண்டிற்கும் ஒரு பேதமுளது. நோயாளி இறந்தபின் அந்நோயு மில்லையாதலின், உண்டஉயிரோடு தானும் மாய்வது நோய். பேயோ தான் பற்றிய உயிரை உண்டபின்னும் இருக்கப்பெறும். ஆதலின் பேயென நின்றவள் தனக்கு முலைதந்த பான்மையால் தாயுமாகிய தன்மையை விளம்பி வியந்தனன் பரதன். "ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ" என்று புகழ்தற்குரிய பெருமை பரதனுக்கு வந்ததும் அத்தாயினால் தானே என்பதை எண்ணுங்கால் கைகேசி தான் செய்தகொடுமைக்குத் தக்கபடி ஈடுசெய்துவிட்டனள் என்றே மதித்தல் வேண்டும்.

மன்னவன் மாய்ந்ததும் பிரிவரிய இராமன் அடவி போந்ததும் ஒருபுறமிருக்கத் தன்னைச் சூழ்ந்துகொண்ட பழியே பரதனைப் பெரிதுந் துன்புறுத்துகின்றது. அப்பழி செய்தது கைகேசியேயன்றி இராமனுந்தான் உடன்பட்டானோவென உயங்குவானாகி,

[டாள்
மாளு மென்றே தந்தையை யுன்னுண் வசைகொண்
கோளு மென்னு லேயெனல் கொண்டா னதுவன்றேல்
மீளு மன்றே யென்னையு மெய்யே யுலகெல்லா
மாளு மென்றே போயின னன்றே வரசாள்வான்



[அரசாள்வதற் குரியவனான இராமன், தந்தை மாள்வான் என்பதைக் கருதாமல், இப்பழிகாரி செய்த கொடுமை என்னாலேயே என்று கொண்டவனாதல் வேண்டும். ஆதலாற்றான் நான் உண்மையில் இவ்வுலகையெல்லாம் ஆள்வேன் என்ற நிச்சயத்தால் அவன் காட்டிற்குப் போயினான். இல்லையேல் அவன் மீள்வானல்லனோ]

என எண்ணியெண்ணி நைகின்றான். அணைத்தற்கரிய கோபம் பின்னுமோர் கொழுந்து விட்டாற்போல்,

வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
நல்லா னையன் றுஞ்சின னஞ்சே யனையாளைக்
கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவற்றே
னல்லே னோயா னன்புடை யார்போ லழுகின்றேன்.

[வில்தாங்கிய தோளுடைய இராமன் கொடிய கானகம் போயினன் என்னக் கேட்ட நல்லவன் தயரதன் உயிர்நீங்கினான். கொடியவனாகிய நானோ அச்சொற்கேட்டும்,விஷம் போன்ற இவளைக் கொல்லாமலும் நானே சாகாமலும் நிற்கின்றேன். இதனால் குறைவற்ற பெரும்பழியால் நிறைந்தவனாகின்றேன். ஆகியும், அன்புடையவர்போல் அழுகின்றேனே]

எனக் கைகேசியைக் கொன்றொழிக்க மாட்டாத் தன் கைகளைப் பிசைந்த வாங்கே தன்னையும் ஏசிக்கொள்கின்றனன். பின்னரும்,

கொன்றே னானென் றந்தையை மற்றுன் கொலைவாயா
லொன்றோ கானத் தண்ணலை யுய்த்தே னுலகாள்வே
னின்றே னென்றா னின்பிழை யுண்டோ பழியுண்டோ
வென்றே னுந்தா னென்பழி மாயு மிடமுண்டோ.

[உன் கொலைபுரியும் வாயைக்கொண்டு என்தந்தையைக் கொன்றேன். அது ஒன்றுதானோ. இராமனையும் காட்டிற்கு ஓட்டினேன். இனி இவ்வுலகை ஆள நிற்கின்றேன்; என்றால் உன் பிழையும் பழியும் ஒன்றுமில்லை, எல்லாம் எனதே. இந்தப்பழி என்றைக்கேனும் தீரும் வழிதான் உளதோ,—இல்லை]

என வஞ்சகக் கள்வன் என்னும் பழியைத் துயரின் மிகுதியால் தானே வாங்கிக்கொள்கின்றான். கைகேசியைத் தூண்டியவன் பரத னல்லனென்பது நிச்சயம். ஆயினும் அப்பழியைத் தனதேயாய்த் தாங்க நேர்ந்தவிது இயற்கையே. தனக்கில்லாப் பழியையும் பாவத்தையும் தனதாகக் கொள்வது தாங்கரிய துயரத்தின் கோலங்களுள் ஒன்று. பிரம்மாத்திரத்தால் அழிந்து கிடந்த இலக்குவனை நோக்கிய இராமன் தானெடுத்த பொய்ப்பிறவிக்கும் ஒல்லாப் பெருந்துயரால் நைந்து,

மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்குப்
புண்மேல் வைத்த தீயிகர் துன்பம் புகுவித்தேன்
பெண்மேல் வைத்த காதலி னிப்பே றுகள்பெற்றேன்
எண்மேல் வைத்தே னென்புகழியான் றனெளிதேனே

என்று புலம்புமிடத்தும், மண்மேல் தான் வைக்காத காதலை வைத்தாற்போலிரங்கித் தனக்கு எளிமையும் பழியும் இழைத்துக்கொண்டவனாயதும் இவ்வியற்கை பற்றியே.

பரதனிற் கின்று பாவமும் பழியும் வந்துற்றன. அவை தீருமாறில்லை யென்னத் தளர்ந்தானாயினும் பின்னர் ஒருவண்ணஞ் சிறிது தேறி,

கண்ணு லேயென் செய்வினை யின்னுஞ் சிலர்காண
மண்ணுர் பாரா தெள்ளுவர் வாளா பழிபூண்டா
யுண்ணு நஞ்சங் கொல்கில தென்னு முரையுண்டென்
றெண்ணு நின்றே னன்றி யிரேனென் னுயிரோடே

[யான் இனிச் செய்யப்போவதைக் காணுதவரையிலுந்தான் இவ்வுலகத்தவர் என்னை எள்ளுவார். (அதனைக்கண்டபின் எள்ளமாட்டார்). நீயோ உன்(கருத்தும் நிறைவேறாது) வீண்பழியே பூண்டாய். நீ யெனக்குத் தேடிவைத்த விஷத்தை யான் உண்டால் தானே எனக்குக் கேடு வரும்-(இராச்சியத்தை ஆண்டாலல்லாது எனக்குப் பழியில்லை) இதனை எண்ணியே நான் உயிருடன் இருக்கின்றேன்; அல்லாக்கால் உயிர் நீத்திருப்பேன்.]

எனத் தன் பழிக்கும்,

என்றான் பாவிக் கும்பி வயிற்றின் னிடைவைகித்
தோன்றுந் தீராப் பாதக மற்றென் றுயர்தீரச்
சான்றுந் தானே நல்லற மாகத் தகைஞால
மூன்றுங் காண மாதவம் யானே முயல்கின்றேன்

[பாவியாகிய உன் நரகம்போன்ற வயிற்றில் பொருந்தியிருந்ததனால் விளைந்த தீராத பாவம் நீங்கி என் துயரம் ஒழிய, நல்லறமே சாட்சியாகப் பெருமையுடைய மூன்று உலகமும் காணும்படி நான் பெரிய தவம் செய்வேன்]

எனத்தன் பாவத்திற்கும், கழுவாய் இவை யிவையெனத் துணிந்து, கைகேசிக்கும்,

சிறந்தார் சொல்லு நல்லுரை சொன்னேன் செயலெல்
மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னைத் [லா
துறந்தா யாகிற் றாயையு மாதி யுலகத்தே
பிறந்தா யாதி யீதல தில்லை பிறிதென்றான்

[பெரியோர் சொல்லும் நல்ல வார்த்தைகளை உனக்கு எடுத்துச் சொன்னேன். தானாகப் போகமாட்டேனென்கிற உன் உயிரை விட்டுவிடுவாயானால் நீ செய்த கொடுமைகளை மறந்தவளாகி மனம் வருந்தாதிருப்பதுடன் தூயவளும் ஆவாய். இவ்வண்ணம் நீ இறப்பதாற்றான் பிறந்ததன்பயனை எய்தக்கூடும், இதுவன்றி உனக்கு வேறு வழியில்லை]

என்று அறிவுறுத்தி, இனி இப்பாவியின் பக்கத்திராமல் தன்துயர் ஆறும்படி தாயகோசலையின் பொன்னடி தொழுவன் என்று பரதன் எழுந்து போயினான்.

வாளா வன்பழி பூண்டதல்லால் ஏழைக் கைகேசி தன் சூழ்வினையினால் கண்டதொன்றில்லை. இந்தப் புணர்ப்பினால் எத்துணையோ செல்வமும் சிறப்பும் தனக்கு வந்தெய்துமென் றெண்ணியதற் கெதிராக, கணவனை இழந்து, வீரவரும் புவிக்கெலாம் வேதமே யெனத்தகும் இராமனைத்துறந்து, மைந்தனுறவையுமிழந்து, புகழுமிழந்து, பழியின் பெருஞ்சுமையோடு வசைவெள்ளம் நீந்தவேண்டியவ ளாயினாள். ராபர்ட் பர்ன்ஸ் (Robert Burns) என்னும் ஆங்கிலக் கவி,

But, Mousie, thou art no thy lane
In proving foresight may be vain
The best-laid schemes o'mice and an'men
Gang aft agley,
An' lea'e us nought but grief an' pain
For promised joy.

என்று மொழிந்த சொற்கள் கைகேசியை ஓர் சுண்டெலியுடன் பொருந்துமாறு செவ்விதின் இணைத்து வைக்கின்றன.

அமையம் வாய்க்குமேல் வாய்நிறைந்த வசைகளோடல்லது ஒருவரும் வான்மீகத்தினுள் வரமாட்டார். மானுட இயற்கைக்கு மாறுபாடின்றி உள்ளதை உள்ளவாறே உரைக்கும் வாய்மையாளர் என்னும் புகழ் பெரிதுடைய அம்முனிவர்தம் நூலில் போனவிடமெல்லாம் பரதனை யவன் புன்விதி தொடர்ந்தது. வந்த பரதனைக் கண்டவுடன் கோசலையும் வேறோர்

வார்த்தையின்றி, "இராச்சியத்தில் ஆசையுள்ள உன்னால் பகையற்ற இராச்சியம் அடையப்பட்டது; அது தானும் கைகேசியின் கொடிய தொழிலால் சடிதியில் அடையப்பட்டது......இந்த இராஜ்யம் அக்கைகேயியால் உனக்குக் கொடுக்கப்பட்டதன்றோ" எனப் பரதனது என்பெலாம் இரிதர இழித்துப்பேசினுள். இச்சொல் பகரவருமுன் வான்மீகர், கௌசலையை நன்மன முடையவள் என்ற அடைமொழியால் குறிப்பிடுவார். நன்மனமுடைமைக் கடையாளம் இதுவேயாயின் என் செய! துயரத்தால் அம்மனம் உடைந்திருப்பதால் பரதனுக்கு இயையாமாற்றம் இது இயம்பினுளென்னு மமைதியு ளொதுங்கலரிது. பொன்னின் மனமுடைந்தாலும் பொன்னேயாகும். பரதனையும் இராமனையும் போன்ற நல்லோர் கழிபெருந் துயரத்திற் காட்பட்டபோது இல்லாப்பழியைத் தம்மேல் ஏற்றிக்கொளின் கொளலாமன்றிப் பொல்லா வசையைப் பிறர்தலை சுமத்தமாட்டார். இவ்வம்பினுல் மருமத்தில் எற்றுண்ட பரதன் மதிமாழ்கித் தன்னுடம்பாடின்றி நடந்த சூழ்ச்சி யதுவென்று அருஞ்சூள் பற்பல அறையலுற்றுன். அவைகளைப் பின்னர் ஆராய்வோம். இவைபாவும் இருந்து கேட்ட கோசலை பரதனை நோக்கி, "என் புதல்வனே, உனது மனம், லக்ஷ்மணன் மனம்போல் தெய்வாதீநமாய்த் தருமத்தினின்று தவருது நிற்கின்றது" எனப் பாராட்டினுள் என்பர் வடநூன் முனிவர். மனிதர் மனம் தருமத்தினின்று தவறவேண்டுவதே இயற்கையென்பதும், தவருதிருக்குமாயின் அது தெய்வாதீநமே என்பதுந் தான் கோசலை வடமொழியில் அம்முனிவரர்பால் கற்கவல்லவ ளாயினுள் போலும்.

## களவியற் காரிகை

[814-வது பக்கத் தொடர்ச்சி]

30. நயந்து குறையுற் றவன்வாழ் பதிவின யாணர்மிக்க
கயந்தங்கு வேழம் வினுத லினமான் கலைவினுதல்
முயன்றன் வருமு வழிவினு வாயின் மொழிக்கிரங்கல்
வயந்தந்த வஞ்சு மதியுடம் பாடென வைந்தனரே.

என்-னின்,மதியுடம்படுத்தல் ஐந்துவகைப்பட்டகிளவியாமென்பதறிவித்தலேக் கருதிற்று. என்னே? பதிவினுதலும், வேழம் வினுதலும், கலைவினுதலும், வழிவினுதலும், வாய்மொழிக்கிரங்கலும் என. அவற்றுள், பதிவினுதலென்பது இரந்து குறையுற்ற தலைமகன் ருேழியுடைய கவர்த்து நின்றவறிவை யொருவழிப்படுப்பான் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

தாரென்னவோங்கு சடைமுடி மேற்றனித்திங்கள்வைத்த
காரென்ன வாருங் கறைமிடற் றம்பல வன்கயிலை
யூரென்ன வென்னவும் வாய்திற வீரொழி வீர்பழியேற்
பேரென்ன வோவுரை யீர்விரை யீர்ங்குழற் பேதையரே.
—திருக்கோவை-56.

அறையார் கழல்மன்ன ராற்றுக் குடியமர் சாய்ந்தழியக்
கறையா ரயில்கொண்ட கோன்கன்னிக் கார்ப்பு [னங்
காப்பு] நின்ற
பிறையார் திருநுதற் பெண்ணு ரமுதன்ன பெய்வளையீர்
மறையா துரைமி னெமக்குநும் பேரொடு வாழ்பதியே.
—பாண்டிக்கோவை.

அருவி யார்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்குஞ் சிறுசுளைப் பெரும்[பழங்]
[குழ]விச் சேதா மாந்தி யயலது
வேய்பயி லிறும்பி ஞுமுலே (?ஞுமறல்) பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவுஞ் சொல்லீ ராயிற் கல்லெனக்
க[ருவி மாம]ழை வீழ்ந்தென வெழுந்த
செங்கே ழாடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய்புனங் காவலு நுமதோ
கோடேந் தல்குல் நீடோ ளீரே.
—நற்றிணை-213.

செய்யவாய் நுண்மருங்குற் சிற்றிடைப் பேரமைத்தோட்
பையர வல்குற் பணைத்தே(மு)ந்தும்-வெய்யமுலைக்
காரே துவர்வாய்க் கருங்கூந்தற் காரிகையீ
ரூரேது சொல்லீ ருமக்கு.
—கிளவித்தெளிவு.

வேழம்வினுத லென்பது தலைமகளுந் தோழியு மோரிடத்திருப்பச் சென்று தன் குறையறிவிப்பான் சில வேழம் போந்தன வுள[வோ]வென்று சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

இருங்களி யாயின்றி யானிறு மாப்பவின் பம்பணியோர்
மருங்களியாவன லாடவல் லோன்றில்லை யான்மலையீங்
கொருங்களி யார்ப்பவுமிழ்மும் மதத்திருகோட்டொருநீள்
கருங்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே.
—திருக்கோவை-52.

வருமால் புயல்வண்கை மான்றேர்
வரோதயன் மண்ணளந்த
திருமால் வளவஞ்சி யா(?யன்)னவஞ்
சீறடிச் சேயிழையீர்
கருமால் வரையன்ன தோற்றக்
கருங்கைவெண் கோட்டுப்பைங்கட்
பொருமால் களிறென்று போந்ததுண்
டோநும் புனத்தயலே.
—பாண்டிக்கோவை.

செம்முக மானதர் செங்குங்கு மப்புயா சீர்திறந்த
மைம்மலி வாசப் பொழில் [வாய்மதிய] ன்னவா ணுதலீர்
மும்முத மாரி பொழியப் பொழிமுகில் போல்முழங்கிக்
கைம்மலை தாம்வரக் கண்டதுண் டோநும் கடிப்புனத்தே.
—பல்சந்தமாலை.

சீத விரைக்களபச்(?னகச்) செந்தா மரைப்பொகுட்டு
மாதனையீ ரம்போடு வந்ததோ—சோதிப்
பொருதாரை வேற்கண்டன் பூபால தீபன்
கருதாரி [னிங்கோ]ர் களிறு.
—கண்டனலங்காரம்.

கலைவினுத லென்பது தலைமகளுந் தோழியு மிருந்தவிடத்துச் சென்று சில மான்போந்தன வுளவோ வெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

கருங்கண் ணனையறி யாமைநின்
ருேன்றில்லைக் கார்ப்பொழில்வாய்
வருங்கண் ணனையவண் டாடும்
வளரிள வல்லியன்னீர்
பொருங்கண் ணினைய கணைபொரு
புண்புண ரிப்புனத்தின்
மருங்கண் ணனையதுண் டோவந்த
தீங்கொரு வான்கலையே.
—திருக்கோவை-53.



சிலைமாண் படைமன்னர் செந்நிலத்
தோடச் செருவிளைத்த
கொலைமா ணயின்மன்னன் றென்புன
ஞடன்ன கோல்வளையீ
ரிலைமாண் பகழியி னேவன (?னேவுண்டு)
தன்னினத் துட்பிரிந்தோர்
கலைமான் புகுந்ததுண் டோவுரை
யீருங்கள் கார்ப்புனத்தே.
—பாண்டிக்கோவை.

அம்புமுகங் கிழித்த புண்வாய்க் கலைமான்
போந்தன வுளவோ
மடஞேக்க மரீஇயினம் படர்ந்தே.
—பொருளியல்.

நறைபரந்த சாந்த ம[றவெறிந்து] நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரை போன்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன [வீண்டு.]
—திணைமொழி.

தத்திச் சிலைத்தெழுந்து தார்குருதி மெய்சோர
இத்திக்கி லிந்தப் புனத்திடையே—தித்தித்தேன்
போந்தனைய தோர்குழலீர் யானெய்த [போ]தொருமான்
போந்ததே யிவ்வழி[ப்புக்கு.]
—பழம்பாட்டு.

வழிவினுத லென்பது நும்மூர்க்கு வழி சொல்லுமினெனச்சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

சிலம்பணி கொண்டசெஞ் சீறடி பங்கன்றன் சீரடியார்
குலம்பணி கொள்ள வெனைக்கொடுத் தான்கொண்டு
[தானணியுங்
கலம்பணிகொண்டிடமம்பலங்கொண்டவன்கார்க்கயிலைச்
சிலம்பணி கொண்டநுஞ் சீறூர்க் குரைமின்கள் சென்
[னெறியே.
—திருக்கோவை-54.

வெல்லுந் திறநினைந் தேற்ருர் விழிஞத்து விண்படரக்
கொல்லின் மலைந்தசெவ் வேல்கொண்ட கோன்கொல்
[லிச் சாரலின்றேன்
புல்லும் பொழிலின வேங்கையின் கீழ்நின்ற பூங்கொடியீர்
செல்லு நெறியறி யேனுரை யீர்நுஞ் சிறுகுடிக்கே.
—பாண்டிக்கோவை.

உரைமி னீர்மன் னெமக்கே வரையிடை
யரும்படர்க் கவலை நீந்திய
பெருந்துயர்...........தருநெறியே.
—பொருளியல்.

வாய்மொழிக்கிரங்க லென்பது இவ்வகை பலவும் வினவவுரைபெருது நின்ற தலைமகன் வருந்தல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

இரத முடைய நடமாட் டுடையவ ரெம்முடைய
வரத முடைய வணிதில்லை யன்னவ ரிப்புனத்தார்
விரத முடையர் விருந்தொடுபேச்சின்மை மீட்டதன்றேற்
சரத முடையர் மணிவாய் திறக்கிற் சழ(?ல)க்கென்பவே.
—திருக்கோவை-57.

தன்னும் புகையு மழையுரு
மேறுந்தன் ருனைமுன்ஞத்
துன்னுங் கொடிமிசை யேந்திய
கோன்கொல்லிச் சூழ்பொழில்வாய்
மின்னுங் கதிரொளி வாண்முகத்
தீரென் விஞவுரைத்தால்
மன்னுஞ் சுடர்மணி போதரு
மோவுங்கள் வாயகத்தே.
—பாண்டிக்கோவை.

188940

விந்தா சனிகொண்கன் வேந்தரி
லாண்பிள்ளை வென்றிவெற்பிற்
கொந்தார் தினைப்புனங் காவனிற்
பீர்வழி கூறுமென்று
வந்தார் சிலர்க்கு வழியறி
வாரொரு வார்த்தைசொன்ஞற்
சிந்தாது காணும் பவழச்செவ்
வாயிற் றிருமுத்தமே.
—வங்கர்கோவை.

இவ்வகை பிறவும் வந்தன வெல்லாம்
'இரந்து குறையுறுது கிழவியுந் தோழியும்
ஒருங்குதலைப் பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினுஅய்ப்
புதுவோன போலப் பொருந்துவ கிளந்து
மதியுடம் படுத்தற் குரிய வென்ப'
—இறை - 6.

என்னுஞ் சூத்திரத்துட் கண்டுகொள்க. மதியுடம் படுத்தல் முற்றும். (௩௰)

31. உடன்படுதோழியயிர்ந் தன்றுரைத்தல் சுனையாட்டுதல்
அடர்ந்தெதிர் நன்சுனையின் வியப் பம்புலி யவ்வணங்கு
நடம்பயி லுஞ்சுனை தன்னை மிகுத்தல் நடுங்கநாட்டம்
தடங்கையைவென்றவிழியாய்துறையையுறவுணர்வே.

32. உறவா யிருவ ரிடத்து முரவோன் வரவுணர்தல்
திறமார் வைகையைக் கரவுநாட்டஞ்சேட் படுத்தலந்த
விறலா ரவனை மறையே லெனல்கூ றெனவிடுத்தல்
அறலார் குழலை யறியே னெனல்குறி யா[ள்]கூறலே.

33. ... ... ...
... ... ...
... ... [கை]யுறை பறைசீர்
மாறுந்தகைத்தா நகைத்துரையாடல் தகைமறுப்பே.

34. மறுத்தாள்தறிப்பறிந் தேற்றல்மடற்றிறங் கூறுதல்பின்
வெறுப்பார் மடலை வெளிப்படுத்த[ல்]லம் மடல்
[விலக்கல்
செறுப்பாலெழுதரிதே[மெ]ன்றலச்சேட்படைக்கழிதல்
ஒறுத்தா ளருளின்றுடையளானுளென் றுரைத்ததுவே.

35. உரைக்கத்தகுந்தழை கோடல்தறிப்பை யறிவுறுத்தல்
விரைப்போந்தழைலவலிதாக்குறைநயப்பித்தல்மிக்க
வரைக்குற்ற கோங்கை...

36. ... ... ...
37. ... ... ...
38. ... ... ...
39. ... ... ...
40. ... ... ...
41. ... ... ...
42. ... ... ...

[இச் சூத்திரங்கள் என்...னின் .............. தோழியயிர்த் துரைத்தலும், சுனையாட்டுரைத்தலும், சுனைவியந் துரைத்தலும், பிறைதொழு கென்றலும், தகையணங்குறுத்தலும், நடுங்கநாட்டமும், குறையுணர்வும், இருவருமுள்வழி யவன் வரவுணர்தலும், கரவு நாட்டமும், சேட்படையும், மறையேலெனலும், கூறென விடுத்தலும், அறியே னெனலும், குறியாள் கூறலும், அரியளாமெனலும், குலமுறை கிளத்தலும், நகைத்துரையாடலும், தழை மறுத்தலும், குறிப்பறிந் தேற்றலும், மடற்றிறங் கூறலும், மடல் வெளிப்படுத்தலும், மடல்விலக்கலும், எழுதரி]தென்றலும். சேட்படைக்கழிதலும், அருளுடையளென்றலும்,(?)குறிப்பறிவுறுத்தலும்,வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தலும் மெலிதாகச்சொல்லிக்குறைநயப்பித்தலும், நாணெடுகூறலும், முகம்புகுதலும், நயந்தமை கூறலும், பகற்குறியிடங்காட்டலும், இடத்துய்த்தலும், இடத்துய்த்

தகறலும், எதிர்ப்படலும், கோலஞ்செய் துரைத்தலும், உண்மகிழ்ந்துரைத்தலும், கொண்டு நீங்கலும், வாய்விடு கிளவியும், பொழுதுகண் டிரங்கலும், படருறுகிளவியும், வருந்துதல்கிளத்தலும், இன்றறிந்தேனென்றலும், குடித்திறங்கூறலும், இற்செறிவுரைத்தலும், சிறைப்புறக்கிளவியும், வெளிப்பட வுரைத்தலும், கணியென வுரைத்தலும், நனைகெடச் செய்திலமென்றலும், எறுவிடு[த்]தலும், சூளென நினைத்தலும், புனங்கண் டழிதலும், இரவிடங்காட்டலும், வரவுணர்ந்துரைத்தலும், தாய்துயிலறிதலும், இரவுக்குறியுய்த்தலும், குறியுய்த்தகறலும், குறியெதிர்ப்படலும், திங்கட்குரைத்தலும், அன்னத்தொலி யுணர்தலும், கடலொலி கூறலும், இரவுக்குறி கழிதலும், கழிபடர் கிளவியும், கையறு கிளவியும், அச்சக்கிளவியும், பகல்வரலென்றலும், இரவு வரலென்றலும், இரவும் பகலும் குறி வாரலென்றலும், தன்னுட் கையா றெய்திடு கிளவியும், கடலொடு கவலலும், ஆற்றாமை கூறலும், வரைவு கிளத்தலும், குறிப்புரைத்தலும், இல்லதுரைத்தலும், அலரறிவித்தலும், அயன்மண முரைத்தலும், மணமுரசறைதலும், பரிசங் கிளத்தலும், உடன்போக்குரைத்தலும், செலவுடன்படுத்தலும், செலவழுங்குவித்தலும், எனப்படுமென்றவாறு. அவற்றுள் அயிர்த்துரைத்தலென்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகள் கண் சிவப்பு வேறுபாடுகண்ட தோழி யயிர்த்துரைத்தல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

நிருத்தம் பயின்றவன் சிற்றம்
பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலுங் கயிலை
மலையி னுயர்குடுமித்
திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந்
தாடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி
மெல்லியல் வாடியதே. —திருக்கோவை-62.

கந்தா ரடுகளி யானைக் கழனெடு மாறன்கன்னிக்
கொந்தா டிரும்பொழில் வாய்ப்பண்ணை யாயத்துக்கோல [மென்பூம்
பந்தா டலினடி நொந்துகொல் பைங்குழல் வெம்மணன் [மேல்
வந்தா டலினடி நொந்துகொல் வாணுதல் வாடியதே.
—பாண்டிக்கோவை.

புனையிழை யாயமொடு பூம்பந் தெறிய[வும்]
நனைமலர் ஞாழ லொள்வீ கொய்யவும்
வருந்தினள் கொல்லோ மடந்தை
பிரிந்தன்று மாதோ பண்புகெழு நிறனே.
—பொருளியல்.

கண்ணுஞ் செவ்வரி பரந்த [ன்று நுதலு]
நுண்வியர்ப் பொறித்து வண்டார்க் கும்[மே]
வாங்கமை மென்றோண் மடந்தை
பா(?யா)ங்கா யினள்கொ லென்னுமெ[ன்] னெஞ்சே.
—சிற்றெட்டகம்.

[குன்றின் சுனையிற்] குளித்தோ குளிர்காவி
லொன்ற மலர்கொய்ய வோடியோ—வன்றுயின்
மற்றின்று துண்டோ மலர்வல்லி வாடியதின்
றெற்றிது ல[ாமா]றிது. —கிளவித்தெளிவு.

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.
—காமத்துப்பால் - 1272.

சுனையாட்டுரைத்த லென்பது, நெருநல் நின்னை நீங்கி மேதக்கதொர் சுனையாடினேற்கு ஆயிற்றுகாதே யிவ் வேறுபாடு எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

மதிமர பாந்திரு மாமர பிற்றிகழ் மாற னெங்கோ
னதிசெய பாண்டிய னுமரி கேசரி யானைதங்கும்
பொதியிலி னுங்குனை நீங்கிய போதொரு பூஞ்சுனைவாய்
விதியது தான்கொடு போய்ப்புன லாட்டு விளைவித்ததே.
—பாண்டிக்கோவை.

சுனைவியந்துரைத்த லென்பது, சுனையாடினேர்க்கு இந் நீர்மை பெறலாமெனின், யானுங்குடைவேனெனச்சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

செந்நிறமேனிவெண் ணீறணிவோன்றில்லை யம்பலம்போ
லந்நிற மேனிநின் கொங்கையி லங்கழி குங்குமமு
மைந்நிற வார்குழல் மாலையுந் தாதும் வளாய்மதஞ்சே
ரிந்நிற மும்பெறின் யானுங் குடைவே னிருஞ் சுனையே.
—திருக்கோவை - 69.

தேர்மன்னு வாட்படை செந்நிலத்தோடச் செருவிளைத்த
போர்மன்னு தென்னன் பொதியிற் புனமா மயில்புரையு
மேர்மன்னு காரிகை யெய்தலுண் டாமெனின் யானுநின்
னீர்மன்னு நீல நெடுஞ்சுனை யாடுவ னேரிழையே. [போல்
—பாண்டிக்கோவை.

பையுண் மாலைப் பழுமரம் படரிய [க்கு
நொவ்வுப்பறை வாவல் நோன்சிறை கொ(?யொ)
மட(?டி)செவிக் குழவி தழீஇப் பையாந்
திடுகவின் மடப்பிடி யெவ்வங் கூர
வெந்திற லாளி வெரீஇச் சந்தின்
பொரியரை மிளிரக் குத்தி வான்கே
ழுருவ வெண்கோ டியக்கொண்டு கழியுங்
கருங்கண் யானைக் காலில வொற்றலிற்
கோவா வாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
பேஎ நாறுந் தாழ்நீர்ப் (பணிப்) பனிச்சுனைக்
கோனே ரெல்வளை தெளிர்ப்ப நின்போல்
யானு மாடிக் காண்கோ தோழி
வரைவயிறு கிழித்த நிழறிகழ் நெடுவே
றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் கலித்த
வொண்பொறி மஞ்ஞை போல்வதொர்
கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே.
—நெடுந்தொகை?

ஆடுஞ் சுனையா தாடினீ ராகாதே
கோடையிலு மந்நீர் குளிர்ந்திருக்கும்—நீடுபுகழ்க்
கொற்றத்....................தென்குடந்தை
வெற்பிற் குளிர்சுனை நீர். —[............]

வெததன யோமிக் குடந்தை தொண்ணூறு பைங்காந்தள்
செங்காந் தளங்கைக் கொடியிடை... ...
... ... ...
... ...தும்—படிமுனையிற்
சேந்தவேற் கண்டன் சிலம்பிற் பனிச்சுனைநீ
ரீந்தவேர்க் கண்ட னெழில். —கண்டனலங்காரம்.
ஓடியொளித்து ... ...

* * *

[விரையாடிய கண்ணி வேந்தன் விசாரிதன் கொல்லி விண்டோய்]
[வரையா டிய] புனங் காவலு மானின் வழிவரவு
நிரையா டியகுழ லாட்கு மிவற்கு நினைப்பினில்லை
யுரையாடுபகண்ணி னுலுள்ளத்துள்ளது மொன்[றுள]வே.
—பாண்டிக்கோவை.

எனல் காவ லிவளு மல்லள்
மான்வழி வருகு னிவனு மல்லன்
நரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
நம்மு ணுணினள் (?ர்) போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
வுள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னானே. —நற்றிணை?

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன் நன்னுதற்
கொடிச்சி மனத்தகத் தோனே. —பொருளியல்.

பூண்ட குழையும் புனங்காக்கும் போலல...
வாண்டகையு மான்தேடு வானல்லன்—பாண்டொடுத்த
புள்ளோட்டுந் தார்க்கண்டன் பூம்புகா ரன்னார்க்கிங்
குள்ளோட்டங் கண்களிலே யுண்டு. —கண்டனலங்காரம்.



தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[817-வதுபக்கத் தொடர்ச்சி]

## 5. மந்திரசாலைச் சருக்கம்

406. கானுடை விரிதிரை வையங் காக்கிய
மானுட வுடம்பினன் மறைந்து வந்தவத்
தேனுடை யலங்கலான் தெய்வ மார்பகம்
தானடைந் துறைவதற் குரியள் தையலே. 169.

கான் உடை விரிதிரை-கானற் சோலைகளை உடைய கடலாற் சூழப்பட்ட, வையம் காக்கிய - இவ்வுலகத்தை அரசுபுரிந்து பாதுகாக்கும் பொருட்டு, மானுட உடம்பினல் மறைந்து வந்த - மனிதசரீரத்தால் தனது தெய்வத் தன்மை மறையும்படி அவதரித்த, அ தேன் உடை அலங்கலான் - அந்தத் தேனையுடைய பூமாலை அணிந்ததிவிட்டனது, தெய்வம் மார்பு அகம் - தெய்வத்தன்மை பொருந்திய மார்பை, தான் அடைந்து உறைவதற்கு - தான் பெற்றுத் தங்குவதற்கு, உரியள் தையல்-உரியவள் நமது நங்கையாகிய சுயம்பிரபையே.

கான் - கானல் என்பதின் குறை. விரிதிரை - அன்மொழித் தொகை.

---

407 ஆங்கவற் கீந்தபின் ஆழி தாங்கிய
ஈங்கிவற் கொன்றனக் கிரண்டு சேடியும்
தாங்கிய திருவினன் தருமற் றென்றலும்
வீங்கிய வுவகையன் வேந்த னாயினன். 170

ஆங்கு அவனுக்கு ஈந்தபின் - அப் போதனத்தி லுள்ள அவனுக்கு இவளை மணஞ்செய்து கொடுத்தபின், தாங்கிய திருவினன் - எல்லாச் செல்வங்களையும் தாங்கிய அவன், ஆழி தாங்கிய ஈங்கு இவன்கொன்று-வடசேடிக்கு அரசனுய்த் திகிரிசெலுத்தி யாளும் அச்சுவக்கிரீவனைக் கொன்ற, இரண்டு சேடியும் உனக்கு தரும் - இரண்டு சேடியின் ஆட்சியையும் உனக்கே தருவான், என்றலும் - என்று சொல்லலும், (அதைக் கேட்டு) வேந்தன் வீங்கிய உவகையன் ஆயினன்-அரசன் மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டவனானன்.

---

408. கொங்கலர் தெரியலான் றிறத்திற் கொள்குறி
யிங்கியா னிசைத்ததே யமையும் அல்லதோர்
திங்கணா ளகவையிற் றிவிட்டன் ஆங்கொரு
சிங்கம்வாய்பிளந்திடும் தெளியிலென்னவே 171.

கொங்கு அலர் தெரியலான் திறத்தில் - வாசனை விரியும் பூமாலையை அணிந்த திவிட்டன் விஷயமாக, கொள்குறி - நாம் கண்டு கொள்ளுதற்குரிய அடையாளம், இங்கு யான் இசைத்ததே அமையும் - இப்பொழுது நான் புராண வாயிலாக எடுத்துக் கூறியதே போதும். அல்லது - அஃதன்றியும், ஓர் திங்கள் நாள் அகவையின் - ஒருமாத காலத்துக்குள், திவிட்டன் - திவிட்டன், ஆங்கு - தன்னுட்டிலே, ஒரு சிங்கம் வாய் பிளந்திடும் - ஒரு சிங்கத்தை வாயைக் கிழித்துக் கொன்றிடுவான், இஃது என்ன - இந்த அடையாளத்தாலும் நான் சொன்ன இதன் உண்மையை நீ தெளிவாயாக என்று.

---

409. நிமித்தக னுரைத்தலு நிறைந்த சோதியான்
உமைத்தகை யிலாததோ ருவகை யாழ்ந்துகண்
இமைத்தில னெத்துணைப் பொழுதும் ஈர்மலர்ச்
சுமைத்தகை நெடுமுடிச் சுடரத் தூக்கினன்.

நிமித்தகன் உரைத்தலும் - நிமித்தகன் சொல்லைக் கேட்டவுடன், நிறைந்த சோதியான் - நிரம்பிய புகழோடு கூடிய மன்னன், உமைத் தகை இலாதது ஓர் உவகை ஆழ்ந்து - உவமைத்தன்மை இல்லாததொரு மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்து, எத்துணைப் பொழுதும் கண் இமைத்து இலன் - வெகுநேரம் கண்கொட்டாமல், ஈர்மலர் சுமைத்த கை-குளிர்ந்த மலர்ச்சுமையைத் தாங்கிய தன் கைகளை, நெடுமுடி சுடர தூக்கினன் - தனது சிரத்தின்மீது விளங்குப்படி ஏற்றி வணங்கினன்.

உமை - உவமை (இடைக்குறை).

---

410. இருநிதிலத் தலைமகன் இயன்ற நூற்கடற்
றிருநிதிச் செல்வனச் செம்பொன் மாரியாச்
சொரிநிதிப் புனலொடுஞ் சோதி மாலையென்
றருநிதி வளங்கொளு டாள நல்கினன். 173.

இருநிலம் தலைமகன்-பெரிய பூமிக்குத் தலைவனான மன்னன், அ செம்பொன் மாரியாக-பொன்மழையைப் பொழியும் அந்தப் புட்கலாவர்த்தம் என்னும் மேகம் போல, சொரி நிதி புனலொடும் - சொரிந்த பலவகை நிதிகளாகிய நீரோடும், இயன்ற நூல்கடல் திருநிதி செல்வன் - பொருந்திய சாஸ்திரங்களாகிய கடலில் விளையும் சிறந்த ஞானமாகிய கேடில் விழுச்செல்வம் நிறைந்தவனான சதவிந்து, ஆள - ஆளும்படி, சோதி மாலை என்று அருநிதி வளம்கொள் நாடு-சோதிமாலை என்ற அரிய நிதிகளின் வளப்பத்தைக் கொண்ட நாட்டை, நல்கினன் - அவனுக்குக் கொடுத்தான்.

---

411. மன்னவன் பெயர்ந்துபோய் வாயு வேகைதன்
பொன்னகர் புக்கனன் பொழுதுஞ் சென்றது
கன்னிதன் பெருமையுங் கருமச் சூழ்ச்சியும்
அன்னமென் னடையவட் கறியக் கூறினன்.

மன்னன் - அரசன், பெயர்ந்து போய் - நிமித்தகன் மாளிகையினின்று திரும்பிப்போய், வாயுவேகைதன் பொன் நகர் புக்கனன் - தனது மனைவியாகிய வாயுவேகையின் பொன்மயமான கோயிலைச் சேர்ந்தான். பொழுதும் சென்றது-அப்பொழுது பகற்பொழுதும் நீங்கியது (உடனே அந்தப்புரத்துட் சென்று அவன்), அன்னம் மெல் நடை அவட்கு - அன்னப்பறவையின் மெத்தென்ற நடையையொத்த நடையையுடைய அவளுக்கு, கன்னிதன் பெருமையும் கருமம் சூழ்ச்சியும்-தம் மகளின் பெருமையையும் அவளுடைய கலியாண விஷயமாக நடந்த ஆலோசனையின் முடிவையும், அறிய கூறினன் - விளங்கச் சொன்னன்.

நகர் - கோயில், மாளிகை.

---

412. தொக்கிள மலர்துதை விலாத சோலையும்
புக்கிளந் தாமரை நகாத பொய்கையும்
மிக்கிளம் பிறைவிசும் பிலாத வந்தியும்
மக்களை யிலாததோர் மனையு மொக்குமே. 175.

இளமலர் தொக்கு துதைவு இலாத சோலையும்-புது மலர்கள் அடர்ந்து நெருங்கி மலராத சோலையும், இளம் தாமரை புக்கு நகாத பொய்கையும்-புதுத்தாமரை மலர்கள் மலர்ந்து விளங்காத தடாகமும், மிக்க இளம்பிறை விசும்பு இல்லாத அந்தியும் - மிகவும் இளமையான பிறைச்சந்திரனையுடைய விசும்பில்லாத மாலைக்காலமும், மக்களை இல்லாதது ஓர் மனையும் - குழந்தைகளைப் பெறுததொரு வீடும், ஒக்கும்-(பொலிவற்று இருக்குந்தன்மையில்) சமானமாகும்.

———

413. தலைமகன் தாடனக் காகச் சாகையே
நிலைமைகொள் மனைவியா நிமிர்ந்த பூந்துணர்
நலமிகு மக்களா முதியர் தேன்களாக்
குலமிகு கற்பகம் குளிர்ந்து தோன்றுமே 176.

குலம் மிகு கற்பகம் - குலமென்னும் சிறப்பின் மிகுந்த கற்பக விருக்ஷம், தனக்கு-தனக்கு, தலைமகன் தாள் ஆக - தலைமகனை அடிப்பக்கமாகவும், மனைவியே நிலைமைகொள் சாகையா - அவன் மணந்துகொண்ட மனைவியையே நிலைபெற்ற முதற்பணையாகவும், நலம் மிகு மக்கள் நிமிர்ந்த பூந் துணரா - நலம் நிரம்பிய குழந்தைகளேமணமோங்கிய பூங்கொத்துக்களாகவும், முதியர் தேன்களா - முதியோர்களை வண்டுகளாகவும் கொண்டு, குளிர்ந்து தோன்றும் - யாவர்க்கும் மகிழ்ச்சியைத் தருமாறு இனிதாய்த் தோன்றும்.

'நிலைமைகொள்சாகை' என்றது பணைத்தமுதற்கிளையை. நலம் - உறப்பு, குணநலனுமாம். மக்களின் மெய்தீண்டல் சொற்கேட்டலாகிய இன்பங்களை நுகர்ந்து குழந்தைகளை இலாலனை செய்யும் முதியோர்களைத் தேனுக உருவகித்தார்.

———

414. சூழிநீண் முகத்தன துளைக்கை மாவொடு
மாழைநீண் மணியிவை எளிய பண்பினல்
வாழுநீர் மக்களைப் பெறுதல் மாந்தர்க்
காழுநீர் வையத் தரிய தாயதே. 177.

ஆழும் நீர் வையத்து மாந்தர்க்கு - கடலாற் சூழப்பட்ட உலகத்திலுள்ள மனிதர்களுக்கு, சூழி நீள் முகத்தன துளைக்கை மாவொடு - முகபடாத்தை அணிந்த நீண்ட முகத்தையும் உள்துளையோடு கூடிய துதிக்கையுமுடைய யானைகளுடன், மாழை - பொன்னும், நீள் மணி - உயர்ந்த ரத்தினங்களுமாகிய, இவை எளிய - இவைகள் பெறுதற்கெளியன; பண்பினல்வாழும் நீர் மக்களை பெறுதல்-பாங்கறிந்து வாழும்இயல்பு வாய்ந்த புதல்வர் புதல்விகளைப் பெறுதல், அரியது ஆயது - அரியதாகும்.

———

415. தகளிவாய்க் கொழுஞ்சுடர் தனித்துங் கோழி
நிகளவாய்ப் பிளந்தகஞ் சுடர நிற்குமே [ருள்
துகளிலாச் சுடர்மணி துளும்பும் பூணினய்
மகளெலாத் திசைகளு மலிர மன்னினள் 178.

துகள் இல்லா மணி சுடர் துளும்பும் பூணினய் - குற்றமற்ற மணிகளின் ஒளி பரந்த ஆபரணங்களை அணிந்தவளே, தகளிவாய்-அகலினுள்ளே, கொழும் சுடர் தனித்தும் - கொழுமையான தீபவொளி தனியே அடங்கி இருந்தாலும், கொழுமை இருள் நிகளம் வாய் பிளந்து - கொழுத்த இருட்டாகிய விலங்கின் பூட்டைத் துணித்து அகற்றி, அகம் சுடர நிற்கும் - வீடு முழுதும் ஒளியுறத் தான் விளங்கும். (அதுபோலவே), மகள் - நமது மகள், எல்லாத்திசைகளும்-எல்லாத்திசைகளும், மலிர மன்னினள் - தன்னாற் பெருஞ்சிறப்புற்று விளங்குமாறு நம்மிடத்துப் பிறந்துற்றுள்.

கொழுமை இருள் - கோழிருள், நிகளம் - காலிலிடும் விலங்கு, தளை.

———

416. வலம்புரி வயிற்றிடைப் பிறந்த மாமணி
நலம்புரி பவித்திர மாகு நாமநீர்
பொலம்புரி மயிலனைப் பயந்த பூங்கொடி
குலம்புரிந் தவர்க்கெலாங் கோல மாகுமே 179.

வலம்புரி வயிற்றிடை பிறந்த மா மணி - வலம்புரிச்சங்கினிடத்துத் தோன்றிய சிறந்த முத்தினல், நாமநீர் நலம்புரி பவித்திரம் ஆகும் - கடல் நன்மையைச் செய்யத்தக்க தூய்மையதாகும். (அது போல), பொலம்புரி மயில் அன்னய் - பொன்னல் அலங்கரிக்கப்பட்ட மயில் போன்றவளே, பயந்த பூங்கொடி - நீ பெற்ற நங்கை, குலம் புரிந்தவர்க்கு எல்லாம் கோலம் ஆகும் - தான் பிறந்த குலத்துடன் சம்பந்தப்பட்டு அதன் பெருமைமை விரும்பியவர்க்கெல்லாம் அழகைச்செய்யும் அணிகலன் ஆவாள்.

நாமநீர் - கடல், பவித்திரம் - புனிதம், தூய்மை. பொலம்புரி 'பொன்னென் கிளவி,' (எழுத்து—புள்ளிமயங்கியல், 356) என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், 'பொன்' என்பது 'பொலம்' என்றுயிற்று. கோலம், ஆகுபெயர்.

———

417. மக்களை யிலாதவர் மரத்தொ டொப்பவென்
றெக்கநின் றுரைப்பதோ ருரையு மூய்த்துநீ
நக்கவா ளிளம்பிறை வளர்ந்த நாட்கதிர்ச்
செக்கர்வா னனையதோர் திருவு மெய்தினய் 180.

மக்களை இல்லாதவர் மரத்தொடு ஒப்ப - குழந்தைகளைப் பெறுதவர் பட்டமரத்துக்கு நேராவர், என்று-என்று, ஒக்கநின்று உரைப்பதோர் உரையும்-ஒருபடித்தாய் யாவராலும் உரைக்கப்படுவதோர் வசைமொழியையும், மூய்த்து - வெளிப்பட வொட்டாமல் மூடி மறைத்து, நீ - நீ, நக்க வாள் இளம்பிறை வளர்ந்த நாள் கதிர் - ஒளிபொருந்திய கைவாளை யொத்த இளம் பிறைச்சந்திரன் வளர்ந்து முற்றிய பௌர்ணமிச் சந்திரனேடு கூடிய, செக்கர்வான் அனையது ஓர் திருவும் எய்தினய் - செவ்வானத்தைப் போன்றதொரு பேரழகையும் நீ அடைந்தாய்.

மூய்தல் - மூடல். மரம் - அவகேசி (காய்க்காத) மரம் என்றுமாம்.

———

418. மாவினை மருட்டிய நோக்கி நின்மகள்
பூவினுண் மடந்தைபொற் பூவை நாறெளித்
தேவனுக் கமிர்தமாந் தெய்வ மாமென
ஒவினூற் புரோகிதன்உணர வோதினன் 181.

மாவினை மருட்டிய நோக்கி - (குவளையோ நெய்தலோ வென்று) வண்டுகளை மதிமயங்கச்செய்த கண்களை உடையவளே, பூவினுள் மடந்தை நின்மகள் - தாமரையில் வாழும் திருமகள் என்னத்தக்க உன் மகள், பொன்பூவை நாள் ஒளி தேவனுக்கு - அழகிய காயாம்பூவும் கண்டு வெட்கமுறத்தக்க திருமேனியின் நிறக்காந்தியோடு கூடிய தேவனென்று சொல்லத்தக்க திவிட்டனுக்கு, அமிர்தம் ஆகும் தெய்வம் ஆம் என - உன்னைத் தெவிட்டா ஆரமிர்தம் உண்டாகும் தெய்வம் ஆவாள் என்று, ஓவு இல் நூல் புரோகிதன் - இடைவிடாத நூற்பயிற்சியை உடைய நமது குலகுருவாகிய நிமித்திகன், உணர ஓதினன் - தெளிவாக எடுத்துச் சொன்னன்.

மாவினை; மா - வண்டு; 'மான்' என்றுமாம். மனைவி தன் கணவனுக்குத் திளைக்கத் தீராக் காமவின்பத்தை நல்கலாலும், கூடலின்பம் சிறக்குமாறு ஊடுங்காலத்து அதனை உணர்த்தலுற்ற நாயகனல் வணங்கப்படும் பெற்றியாலும், இவளை அவனுக்கு "அமிர்தமாந் தெய்வமாம்" என்றுர் என்க.



419. மத்தவார் மதகளிற் றுழவன் மற்றிவை
ஒத்தவா றுரைத்தலும் உவகை கைம்மிக
முத்தவாண் முகிழ்நகை யடக்கி மொய்குழல்
தொத்துவார் பிணையலாள் தொழுதுசொல்லினள்

மத்தம் - செருக்கையும், வார் மதம் - ஒழுகும் மத நீரையுமுடைய, களிற்று உழவன்-யானைகளைக் கொண்டு போர்க்களத்தை உழுபவனுகிய அரசன், ஒத்தவாறு இவை உரைத்தலும் - பொருந்தியவாறு இவைகளைச் சொன்னதும், மொய்குழல் தொத்து வார்பிணையலாள் - செறிந்த கூந்தலில் பூங்கொத்துக்களையும் நீண்ட பூமாலைகளையும் அணிந்த வாயுவேகை, முத்தம் வாள் முகிழ்நகை அடக்கி - முத்துப்போன்ற ஒளிபொருந்திய பற்களினின்றெழுந்த புன்னகையை அடக்கிக்கொண்டு, தொழுது சொல்லினள்-நாயகனை வணங்கிப் பின்வருமாறு பதிலுரைத்தாள்.

———

# யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[816-வது பக்கத் தொடர்ச்சி]

வெண் கலிப்பா

ஒத்த தாழிசைகளோடு கூடிவருவதால் ஒத்தாழிசைக் கலிப்பா வென்றழைக்கப்படுகின்ற கலிப்பாவின் மூன்றுவகைகளாகிய, நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாக்களின் இலக்கணங்களைக் கற்ளும். இனிக் கலிப்பாவின் இரண்டாவது பிரிவாகிய வெண்கலிப்பாவின் இலக்கணத்தைக் கற்கலாம்.

எல்லாக் கலிப்பாக்களையும்போல் துள்ளலோசை சிறக்கவே வெண்கலிப்பாவும் நடக்கும். தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் முதலிய உறுப்பெதுவுமின்றித் தரவு மாத்திரையில் நின்று வெண்பாவைப்போல் ஈற்றடி முச்சீருடையதாயும், ஈற்றுச்சீர் நாள் மலர் காசு பிறப்பு என்னும் வாய்பாட்டுகளில் ஒன்றுகியும் அமையுமாயின் அப்பாட்டு வெண்கலிப்பா எனக்கொள்க. ஆதலின், துள்ளலோசையுடைய நாற்சீரடிகள் பலகொண்டு வெண்பாவைப்போல் முடிவதால் இதற்கு வெண் கலிப்பா எனப் பெயராயிற்று.

துள்ளலோசைக்கு ஆதாரமாயிருப்பது கலித்தளை. வெண்சீரிற்குப்பின் நிரையசை வருவதால் கலித்தளை விளையும். எனவே நிரைமுதலாகிய காய்ச்சீர்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

சேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யுந்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெரு [மானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு [மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமா
லவ்வண்ண மாறிநிற்ப தகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று.

இது எட்டடியால் வந்த வெண் கலிப்பா. இதனில் ஒன்றிரண்டு தவிர எல்லாம் காய்ச்சீர்களாயும், எல்லாம் கலித்தளைகளாகவும் இருந்து, ஈற்றடி வெண்பாவின் ஈற்றடியேபோல் சிந்தடியாவதும் காண்க.

எனினும், வெண்கலிப்பா ஆவதற்கு எல்லாத்தளைகளும் கலித்தளைகளேயா யிருக்கவேண்டுமென்பதில்லை. துள்ளலோசை சிறந்திருக்கவேண்டுவதே அவசியம். வேற்றுத்தளைகள் சில விரவி வந்தாலும் துள்ளலோசை கெடாமலிருக்கலாம்.

குருகையின் மகிழ்மாறன் குலகிரி தனில்வைகுந்
திருமுக மதிபோலுஞ் சிறுபிறை நுதன்மன்னே
இருநயன் மதர்நோக்க மிலவின திதழ்செவ்வாய்
பருமணி நிரையென்னப் பழுதற மிளிர்மூரல்
வருமிள முலைமாதே மதகளி றெனலாகு
மொருபிடி யிடையாகு மொருபிடி நடைசாலு
முருவளர் பணைமென்றே ளுயர்வுறு மரவல்குல்
கருமுகில் குழன்மொழி கரும்பு.

இதனில், கலித்தளையோடு ஆசிரியத்தளையும் விரவி வந்திருப்பினும் துள்ளலோசையே சிறந்திருப்பது காண்க. அவ்வாசிரியத்தளைகளும் நிரையொன்றிய ஆசிரியத்தளைகளா யிருத்தலால் கலித்தளைகளுக் கடுத்துவரத் துள்ளலோசை பிறக்கின்றது. அவை நேரொன்றிய ஆசிரியத்தளைகளாமாயின் துள்ளலோசை பிறவாது. இப்படியே வெண்டளை விரவிய வெண்கலிப்பாவும் வரலாம்.

நாகிளம்பூம் பிண்டிக்கீழ் நான்முகனய் வானிறைஞ்ச
மாகதஞ்சேர் வாய்மொழியான் மாதவர்க்கு மல்லார்க்கும்
தீதகல வெடுத்துரைத்தான் சேவடிசென் றடைந்தார்க்கு
மா துயரந் தீர்த லெளிது.

இது நான்கடியால் வந்த வெண்கலிப்பா. முதலிரண்டடிகளும் முற்றிலும் வெண்சீர் வெண்டளைகளால் ஏந்திசைச் செப்பலோசை பிறக்க நடந்து இஃதோர் இன்னிசை வெண்பாப்போல் தோன்றுகின்ற

தெனினும் மூன்றுமடியிலுள்ள கலித்தளைகளோடு விரவி இப்பாட்டில் துள்ளலோசையே சிறந்து பிறப்பது காண்க. இவ்வண்ணம் கலித்தளையோடு மற்ற மூன்று தளைகளும் விரவிவந்து வெண்கலிப்பா அமைதல் கூடும்.

இனி இவ்வாறன்றி எல்லாத்தளைகளும் வெண்டளைகளாகவே அமைந்த வெண்கலிப்பாக்களும் உள.

மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறுஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்று
லென்னீ ரறியாதீர் போல வினைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு.

இது கலித்தளையின்றி, முற்றிலும் வெண்சீர் வெண்டளைகளும் இயற்சீர் வெண்டளைகளும் பெற்று வந்து, வெண்பாவைப்போல் ஈற்றடி சிந்தடியாகிப் பிறப்பென்னும் நிரைபசையில் முடிந்திருக்கின்றது. இதுவும் வெண்கலிப்பாவே. எனினும் கலித்தளையின்றி வெண்டளைகளாலேயே வருகின்ற வெண்கலிப்பாவை, கலி வெண்பா என்றழைப்பர். இது முற்றும் வெண்டளைகளாலமைந்திருப்பினும் வெண்பாவிற்குரிய செப்பலோசையைக் காட்டிலும் கலிக்குரிய துள்ளலோசையே சிறந்திருப்பதால், வெண்பாவினத்துள் ளடங்காமல் கலியுள்ளேயே அடங்கும். இயற்சீர்களெல்லாம் பெரும்பாலும் நேரீற்றனவாயும் வருஞ்சீர்கள் நிரைமுதலனவாயும் நிற்பதால் துள்ளலோசை பிறக்கின்றது.

எனின் கலிவெண்பாவிற்கும் பஃறொடை வெண்பாவிற்கும் பேதம்யாதென்ற சந்தேகமெழுவது இயற்கையே. இரண்டும் வெண்டளைகள் கொண்ட அளவடிகள் பலவற்றால் நடந்து சிந்தடியால் முடிவன. அவ்வாறிருக்க, பஃறொடை வெண்பாவிற்கே, கலிவெண்பா வென்று வேறோர் பேர் கொடுத்து மீண்டும் கலிப்பாவினுள் அடக்க முயல்வதுபோன்றிருக்கின்றிது. ஆயினும், ஓசையைப்பற்றி ஒரு சாராரும், பொருளைப்பற்றி ஒரு சாராரும் இவ்விரண்டிற்கும் பேதம் கூறுவர்.

வெண்டளையும் அளவடியுமே பெற்று நடப்பினும் செப்பலோசை சிறிதும் சிதையாது வருவதைப் பஃறொடை வெண்பா வென்றும், செப்பலோசை சிறிதேனும் வழுவுமாயின் அதனைக் கலிவெண்பா வென்றும் கொள்ளுதல் ஒருவாறு பொருந்தும்.

ஓவாக் கணைபாய வொல்கி யெழில்வேழந்
தீவாய்க் குருதி யிழிதலாற் செந்தலைப்
பூவலங் குன்றம் புயற்கேற்ற போன்றவே
காவிரி நாடன் கடாஅய்க் கடிதாகக்
கூடாரை யட்ட களத்து.

இது செப்பலோசை சிறிதும் வழுவாது வந்திருத்தலால் பஃறொடை வெண்பா. தளையும் சீரும் ஓசை பிறப்பதற் கேதுவாய் நிற்கின்றன வெனினும், அவைகளைப் பயிலுமாற்றால் வேறுவேறு ஓசை சிறத்தலும் இயலும். கவிநலம் வாய்ந்த புலவர்கள் தாம் பாடவரும் பாடலுக்கோர் ஓசை இதுவென முதலில் மனத்தின்கண் நினைத்துத் துவக்கியதும் அவ்வோசைக் கேற்றவாறு சீரும் தளையும் தாமேசேர்ந்துகொள்ளும்.

படுதிரைப்பா லாழி பயந்தவெண் டிங்கள்
நடுவண தாகிய நாண்மலர் நீலம்
இணையென வாண்முகத் தெய்துந் துணைவிழி
நன்னீ ரருவி நறுந்தே னருவியுடன்
மன்னீர்மை வாய்தனவா மாழை வரைபுரையும்
வெண்ணித் திலத்தாம மேதகு நீள்வடத்திற்
பண்ணமைத் தோங்கிய பைம்பூட் புணர்முலை
கூற்றுரு நேர்ந்தோர் குறிப்போ டுயிருண்
மாற்றுருக் கூர்தன் மருள்வண ரைம்பா
லெம்போன் றடிப்பணி யீறின் றியற்று
துமதா ருயிர்கோஎ் டொருவுமின் சேய்த்தென்
றருடக வாண்டாண் டணித்துறு மைந்தர்ந்
குருபமை நூபுர மோவா தொலிக்குந்
தளிர்புரை மெல்லடித் தையல் பொருட்டா
விளம்பிறை வெங்கோட் டிரும்பினர் வான்கை
வளங்கெழு தீவிழி வாரண வேட்டைக்குச்
சிங்கங் குழூஉச்செய் சீறா ரதரிடை
யிங்கியாந் துன்புற வீண்டிருள் யாமம்
பனிமகிழ் மாறன் பராங்குசன் வெற்பிற்
றனிவரல் வேலோய் தவிர்.

இதுவும் வெண்டளையே பெற்று அளவடி பலவாய்ச் சிந்தடி கடையாகி மலர் எனும் வாய்பாட்டில் முடிந்த பாட்டு. வெண்டளை பிறழாதிருப்பினும்செப்பலோசை சிறிது வழுவியிருத்தலால் இது பஃறொடை வெண்பா ஆகாமல் கலிவெண்பா ஆகின்றது.

இனி, வெண்டளையோடு முற்றிலும் வெள்ளோசையும் தழுவி வருமிடத்தும், வெளிப்படையான பொருளோடு வேறோர் பொருளையும் உட்கொண்டிருக்குமாயின், (அது பஃறொடை வெண்பா ஆகாமல்) கலிவெண்பாவாகு மென்றோர் கருத்துமுளது. மேலும் கலிவெண்பா, பன்னிரண்டடிகளுக்கு மேற்பட்டே நடக்கவேண்டு மென்பாருமுளர். வேறு சிலர், பன்னிரண்டடிக்குக் குறைந்ததைக் கட்டளைக் கலிவெண்பா வென்றும், மேற்பட்டதைச் சீர்வகைக் கலிவெண்பா வென்றும் அழைப்பதும் உண்டு. ஆயினும் இவைகளை யெல்லாம் பின்னர்க் கற்கலாம்.

கலா நிலயம்.

1930-வருடத்திய இதழ்களைப்பற்றிய விவரம்

838-வது பக்கத்தில் காணலாம்.



# கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[809-வது பக்கத் தொடர்ச்சி]

குமரப்பெருமானது தூதுவ வீரரிற் சிறந்த வீரவாகுதேவரும், தளர்வில்லாத பூதகணங்களும் துணைவர்களாகிய வீரர்களும் மகேந்திர நகரத்தின் உட்புறத்தையடைந்து மேற்புறத்தை அரியதீயிட்டுக் கொளுத்தினர்களென்று, சூரபன்மனது தூதுவர் கண்ணிற் கண்ட உண்மையை யவனிட முரைத்தபோது, கடுஞ்சின மூண்டவனாகிச் சாரணர்களை நோக்கி விண்ணின் கணுள்ள பெரிய மேகங்களனைத்தையும் நீங்களழைத்துக்கொண்டு வருகவெனப் பணிக்க, அவ்வாறே அவர்கள் முகில்களைத் தட்டியெழுப்பி யழைத்துவர அக்கொண்டல்கள் சூரபன்மன்முன் வணங்கி நின்றன. அதுகாலை, சூரன் அவைகளை நோக்கி, இந்த அழகிய நகரினை யழிக்கின்ற தீயைத் தணிவித்திடுங்களெனக் கட்டளையிட்டான் என்ற சந்தர்ப்பத்தில் நம் கவியரசர்,

அறையு மெல்லையி னன்றென வெறிலிக ளகன்று
செறித ரும்புகை யுருக்கொடு விண்மிசைச் சென்றோ
ரிறையி லெங்கணும் பரந்தன மாவலி யிடைபோய்க்
குறிய மாயவ னெடியபே ருருவுகொண் டதுபோல்

(யுத்தகாண்டம், நகர்புகு படலம்.)

என்ற பாசுரத்தைக் கூறியுள்ளார்.

[அவ்வாறு சொல்லிய சமயத்தில் மேகங்கள், சொன்ன வண்ணமே செய்கின்றோமென்றுகூறி, அவ்விடத்தினின்றும் சென்று நெருங்கிய புகை ரூபத்தையடைந்து ஆகாயத்தின்கண்சென்று, மகாபலிச் சக்கரவர்த்தியினிடம் போய் வடிவத்தாற் குறுகிய மாயவன் (அவனளித்த தானநீர்வெண்மையாகத் தாரையாய்த் தன் கையினிடமாக வழிந்துகொண்டிருக்க விண்ணின்கணுயர்ந்து) மிகப் பெரிய விஸ்வரூபத்தைக் கொண்டதுபோல், மிகச் சிறிது நேரத்திற்குள் வானமெங்கும் வியாபிப்பனவாயின—என்பது இதன் பொழிப்புரை]

இனி, இவ்வருணனை யாண்டிருந் தெடுக்கப்பட்டதென்பதினை யாராய்ந் தெழுதுவாம்.

முல்லைப்பாட்டு என்பது சங்கநூல்களுள் பத்துப்பாட்டினு ளொன்றாகும். இது 103 அடிகளையுடையது. பகைமேற் சென்ற தலைவன் வருமளவும் தலைவி யாற்றியிருந்த விடத்து, அவன் வந்ததனைக் கண்டு தோழி முதலியோராகிய வாயில்கள் தம்முட் கூறியதாகக் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. இது தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியின் இயல்பையும், கார்காலத்தின் தன்மையையும், படைவீட்டிற் பகைவர் துயரத்தோடிருத்தலையும், தலைவனது வீரத்தையும் விளங்கக் கூறும்.

இந்நூலில் முதற்கணுள்ள அடியில் வரும் அடிகளை நோக்குவோம்.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி'

[சக்கரப்படையுடனே வலம்புரிச் சங்கத்தை வைத்துள்ள பெரிய கைகளையுடையவனும், இலக்குமியை (மார்பிலே) தாங்குபவனும், (மாவலி வார்த்த) நீர் தன் கையிலே விழுந்த அளவிலே (திரிவிக்கிரமனாய்) உயர்ந்தவனுமான திருமாலைப்போல, ஒலிமுழங்குகின்றதும் குளிர்ச்சி பொருந்தியதுமான கடல்நீரைப் பருகி, வலப்புறமாக எழுந்து, மலைகளை யிருப்பிடமாகக் கொண்டு, அகலத்தைத் தன்னிடத்தேயுடைய உலகத்தை (மழைபெய்யுங் காலத்தே) வளைத்து, எழுந்த விரைந்த கதியையுடைய மேகம்,—என்பது பொழிப்புரை]

கருநிறமுடைமை, உலகத்தை வளைதல், நீர் ஒழுக நிமிர்தல் என்ற தன்மைகளால், மேகம் திருமாலுக்கு உவமையாம். கருநிறமுள்ள மேகம் நீரை யொழுக விட்டுக்கொண்டு உலகத்தை வளைத்தது. திருமால் மாவலிவார்த்த நீர் கைகளினின்றும் ஒழுக நிமிர்ந்து உலகத்தை வளைத்ததனோடு ஒக்குமென்க. முல்லைக்குரிய தெய்வமாகிய மாயோனை உவமைமுகத்தாற் கூறினார். நேமியொடு வலம்புரி தாங்கு தடக்கை மா பொறித்தமால் என்று கூட்டிப் பொருளுரைப்பர் நச்சினார்க்கினியர். நேமியொடு வலம்புரி பொறித்த மா தாங்கு தடக்கை, என்பதற்கு நேமியோடே வலம்புரியையுமுடைய உத்தம இலக்கணமுள்ள இலக்குமியைத் தழுவிய கை, என்றும் பொருள் உரைக்கலாம். இப்பொருளில் நேமி வலம்புரி என்பன அவ்வடிவமுள்ள இரேகையைக் காட்டும் (உரையாசிரியர் சரபமாகிய வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரிய சுவாமிகளது நச்சினார்க்கினியர் உரையைப் பெரும்பாலுந் தழுவிய தெளிவான உரை)

'பாடிமிழ் பனிக்கடல் பருகி' என்றதனால் கடல் நீரைப் பருகி வெண்மேகங்கள் கார்முகில்களாயின என்பது பெறப்பட்டது. இக்கருத்தைச் 'செறிதரும் புகையுருக்கொடு' என்ற தொடரில் கச்சியப்பசிவாசாரியசுவாமிக ளடக்கிவைத்த நயம் நுணுகி யறியற்பாலதாம். 'வலனேர்பு கோடுகொண்டெழுந்த கொடுஞ்செலவெழிலி'' என்றதிலுள்ள விடயம் 'விண்மிசைச் சென்று ஓரிறையி லெங்கணும் பரந்தன' என்ற கந்தபுராணத் தொடரில் அடங்கியிருத்தல் கூர்ந்து கவனிக்கற்பாலதாம். இங்ஙனமே நம் கவிச்சக்கரவர்த்தியார் தக்க சொற்பெய்து சங்கநூற்கருத்துக்களைச் செறித்தடக்குவதை நோக்குவோமாயின் அவரது கவிகள் 'கச்சியப்பசூத்திர' மென்றற் கிலக்காமாறு மிளிர்வதைத் தெளிய உணரகிற்போமென்க. 'நீர்விரிகமலச் செங்கை நீர்செல நிவந்த மாயோன்' என்றார் பாகவதத்திலும். கயந்தரு நறும்புனல் கையிற்றீண்டலும் உயர்ந்தவர்க் குதவிய உதவியொப்ப வாமனமூர்த்தி வளர்ந்துயர்ந்து மிகப் பெரியதோர் விசுவரூபம் படைத்தாரெனக் கம்பநாட்டாழ்வார் அவரது பெருவடிவுக்கு அழகியதோர் உவமையுங் கொடுத்துப் போந்தார். வருணனைப் பகுதிகளில் அரிய பெரிய நீதிநூற் கருத்துக்களை ஆங்காங் குரைத்துப்போதல் நந்தம் புலவர் பெருந்தகையார்க் கியல்பிலேயே நன்கமைந்துள்ள விழுமிய ஓர் பெருங் குணமாம்.

## 1930-வது வருட வால்யூம் - பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும்.

1930-வது ஆண்டு இதழ்கள் கற்போருக்கு மிகவும் பயனளிக்கவல்லது. இந்நாள் மாந்தர் அலலே வாழ்க்கையென மயங்கிக் காற்றில்அடிபட்ட துரும்பெனப் பறக்கின்ற பரிபவம் ஈதென்றும், கற்பதின் பயன் அலேயடங்கி வாழ்தல் என்றும் விளக்குவது 1930-ஆண்டின் தலேயங்கக் கொள்கையாகும். அறியாமை வேண்டப்படும், விஷயத்திற்கேற்ற விளம்பரம், இருபக்கம் எதற்குமுளது, முயலுக்கு முயலவேண்டா, ஒக்க நினைப்பார் உறவு, நல்லோர்கடன், விளம்பிஞல் வெட்கக்கேடு, எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலே யடங்கவேண்டாவோ, தர்க்கத்தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள், வண்டிமாடும் மாட்டுவண்டியும், உரிமை யாற் பெரியராகார், மானமழிந்தபின், கலேகளே மானங்காக்கும், பள்ளியிற் பழுத்தபழம், சண்டெலி ஆற்றல், வாலின் நீளம், பெருமையின் பெருமை ஆப பல தலேப்பின்கீழ் விஷபவாய்மை விளக்கப்பட்டுளது.

அவ்வாண்டில் கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் ஆரம்பமாயது. முதல் 25 இதழ்களில், மதுரை அறிஞரான ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரது 'கைகேசியின் நிறையும், தசரதன் குறையும்' என்னும் நூல் ஆயப்பட்டுளது. இது கற்ரேர்க்கு நல்விருந்தாகும். அறமே நினைத்தும் ஆற்றுவார் இன்னல், கவி யைக் கடந்த கருத்து முளதோ, அமரர்க்கோர் கருவிமே கேகயி ஆயிஞள், அறத்தினைக் காக்கவோ வரத்தினை வேண்டிஞள், கூனியை ஏற்றிய கோபுரமிதுவோ, மன்னவன் புகழைக் கொன்ருே மாதராள் பழியைக்காத் தல், என்னும் தலேப்புக்கள் பலவற்றின்கீழ் பாரதியார்நூல் ஆயப்பட்டுளது. கம்பர் வகுக்கும் அமைச்சின் பெருமை ஈதென்று, வள்ளுவர்துணை கொண்டும் வியாதர் உரைகொண்டும் விளக்கப்பட்டுளது. கம்பராமா யணத்தை ஆழ்ந்து படிப்பவர்க்குக் கலாநிலயத்தில் வரையலாகின்ற கட்டுரைகள் பயன் பெரிதளிக்கும்.

இவ்வாண்டில் இலக்கணம் கற்க விரும்புவார்க்கென்று புணரியல் முழுதும் எளியதாகும் வழியில் 50 இதழ்களில் வந்துளது. முயன்று படிப்போர் எளிதில் இலக்கணத்தைக் கற்றுவிடலாம். இலக்கண வல்லுநர்க்கும் எழும் பல சந்தேகங்கள் இங்கு தெளியவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் குறுந்தொகைஎன்னும் சிறந்த சங்கநூல் உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுளது. குறுந்தொகைஇப்பொழுது புத்தகரூபமாக இல்லேயாதலால் இவ்வாண்டு இதழ்கள் அக்குறையைப் பூர்த்திசெய்கின்றது.

இலஞ்சிப்பாவை என்ற நாவலும், ஆச்சரிய சூடாமணி என்னும் நாடகமும் மானத சாத்திரமும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் வந்துள்ளன.

| விலே விபரம் :— | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| பைண்டு செய்யாதது | 7—8—0 | 9—0—0 |
| காலிகோ கில்ட் | 8—8—0 | 10—0—0 |
| அறை தோல் கில்ட் | 9—0—0 | 10—8—0 |

புத்தகம் வேண்டுவோர் முன்பணம் அனுப்பி, தங்கள் ஊர் ரயில்வேஸ்டேஷனையும் தெரிவித்தால் To pay போட்டு ரயில்வே பார்சலாக அனுப்புவோம். ரயில்வே கட்டணமும் புத்தகம் ஒன்றிற்கு அணு6க்கு மேல் ஆகாது. ரயில் இல்லாத ஊருக்கு போஸ்டில் அனுப்பத் தபால் செலவு ரூ. 2 ஆகும். வேண்டுவோர் புத்தக விலேயோடு தபால்செலவுக்கென ரூ 2 சேர்த்து அனுப்பவேண்டும். பர்மா சிலோன் முதலிய விடங்களுக்கு ரயிலில் அனுப்ப இயலாது. பிஞங் சிங்கப்பூர் மலேயா முதலிய வெளிநாட்டிலிருப்பவர் தபால் செலவிற்காகப் புத்தகம் ஒன்றிற்கு ரூ 3 சேர்த்து அனுப்பவேண்டும்.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.


ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலேயாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

| | |
|---|---|
| 1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ் | ரூ. 1,13,55,069. |
| 1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு | 11,51,813. |
| பிரீமியம் வரும்படி | 30,83,936. |
| 1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி | 7,47,608. |

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.

கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்ருவது ஆண்டு நடக்கின்றது.

| | |
|---|---|
| உள் நாடு வருட சந்தா | ரூ. 2 0 0 |
| வெளி நாடு ,, | ரூ. 2 8 0 |

தனி (சாம்பிள் காபி) பிரதி விலே அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலேக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.




## வர்த்தமானம்

தற்காலம் நாட்டின் பொருளாதார நிலே வீழ்ந்திருப்பது விவசாயிகளே மிகவும் பாதிக்கின்றபடியாலும் தானியங்களின் விலே இறங்கியிருப்பதோடு அவ்விலேக்கும் தானியங்களே வாங்குபவர்கள் இல்லாமையாலும விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர் என்றும், இந்நிலேயில் இந்த அதிகமான நிலவரியை விவசாயிகளால் தாங்கமுடியாதென்றும் எனவே 100-க்கு 30 வீதம் நிலவரி குறைக்கப்படவேண்டுமென்றும் வருகிற சட்டசபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படும் என்று தெரிகின்றது. மாதம் ஒன்றிற்கு 3000 ரூபாய்க்கு அதிகமாய்ச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 40 வீதம் சம்பளம் குறைக்கப்படவேண்டு மென்றும், 3000-க்கு குறைவான சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 20 வீதம் குறைக்கப்பட வேண்டுமென்றும், மற்ருேர் தீர்மானமும் கொண்டுவரப்படும்.

***

சமய மஹாநாடு:—அக்டோபர் மாதம் 8-ந் தேதி வெளியான நியு இந்தியா என்னும் ஆங்கில வாரப்பத்திரிகை கூறுவதாவது:— 1893-வது ஆண்டு அமெரிக்காவில் சிக்காக்கோ என்னும் நகரத்தில் ஒரு பெரிய சமயமஹாநாடு கூடிற்று. அச்சமயம் அம்மஹாநாட்டிற்கு ஸ்வாமி விவேகாநந்தர் சென்றிருந்தார். அங்குக் கூடியிருந்த பல சமயத்தாருக்கு இந்து மதத்தின் சிறப்பை அவர் விளக்கிக் காட்டி இந்துமதத்திற்கு மதிப்பு ஏற்படும்படி செய்தார். இப்பொழுது இன்னொரு உலக சமய மஹாநாட்டைக் கூட்ட முயற்சி நடந்து வருகின்றது. இம்மஹாநாடு 1933-வது வருடம் கூடும். உலகத்திலுள்ள எல்லா மதத்தின் சார்பாகப் பிரதிநிதிகள் இம்மஹாநாட்டிற்கு அழைக்கப்படுவார்கள். இம்மஹாநாடு உலக சமய சமரஸ மஹாநாடு என்று அழைக்கப்படும். மக்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற சிக்கலான பிரச்னைகளே நிவர்த்திப்பதற்குச் சமயத்தை நாடுமாறு ஜனங்களேத் தூண்டும் கொள்கையது இம்மஹாநாடு. ஆத்மஞானம் பெற்ற ஆண்மக்களும் பெண்மக்களும் சேர்ந்து சமுகப் பிரச்னைகளேத் தீர்க்க முயலவேண்டு மென்பது மஹாநாட்டின் சிறந்த நோக்கம். நாட்டின் நலம் ஆத்மஞானத்தில்தான் இருக்கின்றதென்பது இம்மஹாநாட்டார் அபிப்பிராயம். எனவே இம்மஹாநாட்டார் கூடப்போகும் மஹாநாட்டில் உலக சமாதானத்திற்காக முயல்வதற்குத் திட்டம் ஒன்று தயாரித்துச் சமாதான வேலேசெய்ய முற்படுவர்.

சமீபத்தில் நடந்த காந்திவாரத்தில் இந்தியாவில் எட்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர் விற்றது என்றும், பம்பாயில் மாத்திரம் ஸ்ரீமான் நாரிமன் முயற்சியால் $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்குக் கதர் விற்றதென்றும் அகில இந்திய கதர்ச்சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

***

ஞானிபானு :—முகமதியர்களால் நபி நாயகம் என்றும், பெரியோர்கள் என்றும் கொண்டாடப்படும்பலர் ஜீவிய சரிதைகளும், முகமதிய மதத்திற்கு அன்னர் செய்துள நலமும், அவர்கள் ஜனங்கள் உய்வதற்கு அருளிய அறவுரைகளும் உத்தமபாளயம் மௌல்வி S. S. முகமது அப்துல்காதிர் சாயப்பு அவர்களால் இந்நூலின்கண் விளக்கப் பெற்றிருக்கின்றன. பிறர்குறை காணுதிருத்தல் கருணை அன்பு வாய்மை நன்மையைச் செய்தல் தீயனவிலக்கல் கற்றல்,நித்திரையை நீக்கி நிர்மலனைப்போற்றல் முதலிய குணமுடையாரே பெரியார் என்று இந்நூலாசிரியர் விளக்குகின்ருர். இந்நூலேப் பிரசுரித்த உத்தமபாளையம் பெரிய நாட்டாண்மை K. M. முஹம்மது மீரான் ராவுத்தர் அவர்களுக்கு முகமதிய உலகம் கடப்பாடுடையதாகும். இப்புத்தகம் வேண்டுவோர் ஆசிரியரிடமிருந்தோ அல்லது K. M. முகமது மீரான் ராவுத்தரிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

***

வீரபர்மியர் விஜயம்: —ஆசிரியர் வி. நாகையா. பிரசுராலயம், இரங்கோன், மாண்டகாமரி வீதி, நவீனகதா புத்தகசாலேயினர். விலே ரூபாய் ஒன்று.

கிரவுன் 111 பக்கங்களேக் கொண்ட வீரபர்மியர் விஜயம் என்னும் இந்நூல் பர்மிய அரசபரம்பரையையும்,பர்மியப்புராதன நாகரிகம்,கல்வி,போர்முறை அரசு நெறி முதலியவைகளேயும் விளக்குவதாகும். பர்மியப் பூர்வசரிதைகளேத் தெரிந்துகொள்ள விரும்புவோர்க்கு இது மிகவும் பயனளிப்பதாகும். கிறிஸ்திய சகாப்தத்திற்கு முன்னிருந்தே பர்மியர் தன்னரசு செலுத்தி வந்ததும், இந்தியரும் பர்மியரும் அண்மிய நட்புடனிருந்ததும், இந்தியர் கேண்மையிஞல் பர்மா கல்வித் துறையிலும் சமயத்துறையிலும் செறிவு உற்றதும் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுளது. பர்மா ஆங்கில ஆட்சியின் கீழ் வந்தவரையிலுள்ள சிறந்த அரசர்களினதும், போர்வீரர்களினதும் சரிதை இந்நூலில் விளக்கப்பட்டுளது. புத்தகம் நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு நல்லமுறையில் பயிண்டு செய்யப்பட்டுளது. வேண்டுவோர் இரங்கோன் நவீனகதா புத்தகசாலேயினருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

மட சயாவனப்ராசா மட பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை

நஞ்சன்கூடு பல்பொடி

பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்


188940

KALANILAYAM
REG. NO., M 2324.

—:வைத்திய ரத்ன:—
பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபாற் பெட்டி. 287. மதருஸ்.
கேடலாக் இனும்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## ASOKA SALT

## அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

## (அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றுகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோகா கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

## :: உத்தம தோழன் ::

அறியாமையினுல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணு 8.
சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆப்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.
விலாசம் :—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)